Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

தமிழ்Mirror

MONDAY, APRIL 25, 2022

திங்கட்கிழமை ஏப்ரல் 25, 2022 | ஔி: 07 கதிர்: 288 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | Free

## பால்மா விலையும் 6 நாளில் அதிகரிக்கும்



இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலை இந்த வார இறுதிக்குள் மீண்டும் அதிகரிக்கும் என பால்மா இறக்குமதியாளர் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் அசோக பண்டார தெரிவித்தார். தொடர்ச்சி P2

## சவர்க்காரங்களின் விலையும் சடுதியாக அதிகரித்தது



**இவ்வார இறுதிக்குள் பால்மா விலை உயரும்?**

நாட்டில் சவர்க்காரங்களின் விலைகளை 100 சதவீதத்துக்கும் அதிகமாக அதிகரிக்க, சவர்க்கார இறக்குமதி நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன.

70 ரூபாய்க்கு விற்பனை செய்யபட்ட சலவைச் சவர்க்காரக் கட்டியொன்றின் விலை 115 ரூபாய் தொடக்கம் 150 ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், குழந்தைகளின் குளியல் சவர்க்காரம் 175 ரூபாயாகவும் வாசனை சவர்க்காரம் 145 ரூபாயாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2

## உணவுத் தட்டுப்பாடு நாட்டில் ஏற்படும்



**பொருளாதாரம் சீரழிவதாகவும் ரணில் எச்சரிக்கை**

30 சதவீதமான உரங்கள் ரஷ்யாவிலிருந்து வருவதால் உர விநியோகமும் ஆபத்தை எதிர்கொள்கிறது என்று தெரிவித்த முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அடுத்த அறுவடைக் காலத்திலும் இலங்கை உணவுத் தட்டுப்பாட்டை எதிர்கொள்ளப் போகிறது எனவும் எச்சரித்தார். தொடர்ச்சி P2



# போராட்டக்காரர்களைத் தடுக்க கறுப்புக்குள் முள் வேலி

## இரும்பு முட்களால் தடுப்பணை

**போராட்டக்காரர்கள், வேலியைத் தள்ளினாலோ அல்லது தாண்டுவதற்கு முயன்றாலோ அவர்களைக் காயப்படுத்தும் வகையிலேயே இந்த முள் வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன**

ஜனாதிபதி செயலகத்தை அண்மிக்கும் அனைத்து வீதிகளையும் மறித்து, இரும்பு வேலிகளால் தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளதுடன், சில இடங்களில் முள் வேலிகள் அமைக்கப்பட்டு, இரும்பு முட்கள் வெளிப்படாத வகையில் கறுப்பு நிற இறப்பர் போர்வைகளால் போர்த்தப்பட்டிருந்தன. போராட்டக்காரர்கள், வேலியைத் தள்ளினாலோ அல்லது தாண்டுவதற்கு முயன்றாலோ அவர்களைக் காயப்படுத்தும் வகையிலேயே இந்த முள் வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. தொடர்ச்சி P2



## அனைத்து பல்கலைக்கழக மாணவர்கள் அரசாங்கத்துக்கு எதிராக அணி திரண்டனர்

**பிரதமரின் வீடு முற்றுகை பதற்ற நிலை அதிகரித்தது**

தற்போதைய அரசாங்கதைப் பதவிவிலகுமாறு கோரி அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணி கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால், நேற்று (24) மதியம் ஆரம்பமானது. தொடர்ச்சி P2





## பொலிஸாருக்கு புதிய நச்சுவளி தடுப்பு முகமூடி

**பொங்கினர் போராட்டக்காரர்கள்**

கொழும்பு, காலி முகத்திடலை நோக்கி அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் உட்பட போராட்டக்காரர்கள் நகர்ந்துகொண்டிருந்த போது, புதிய நச்சு வளி தடுப்பு முகமூடிகளை (காஸ் மாஸ்) பெட்டிகளிலிருந்து எடுத்தபோது, அங்கு கூடிய போராட்டக்காரர்கள், பொலிஸாரைத் திட்டித் தீர்த்தனர். தொடர்ச்சி P2


### இலங்கையின் முயற்சிகளுக்கு

## ஐ.எம்.எ:ப் குழு ஆதரவு வழங்கும்

தற்போதைய பொருளாதார நெருக்கடியை சமாளிக்க, இலங்கை மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் குழுவினர் ஆதரவு வழங்குவர் என்று நாணய நிதியம் தெரிவித்துள்ளது. தொடர்ச்சி P2

### 3 நாள்களுக்கு

## நாலரை மணி நேர மின்வெட்டு



மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு போதிய எரிபொருள் மற்றும் நீர் இல்லாத காரணத்தால் இன்று (25) முதல் எதிர்வரும் 27ஆம் திகதி வரையான மூன்று நாள்களுக்கு அனைத்து பிரதேசங்களிலும் 4 மணி நேரம் 30 நிமிட மின்வெட்டு அமல்படுத்தப்படும் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

'ஏ' முதல் 'டபிள்யூ' வரையிலான 20 வலயங்களில் காலை 8.30 மணி முதல் மாலை 6.00 மணி வரை 3 மணி நேரமும் மாலை 6.00 மணி முதல் இரவு 10.30 மணி வரை 1 மணி நேரம் 30 நிமிடங்களும் மின்வெட்டு அமல்படுத்தப்படும் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது. தொடர்ச்சி P2

### எந்தவொரு வன்முறையும்

## நாட்டுக்கு கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும்

**இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் எச்சரிக்கை**

அரசாங்கம், பொலிஸ்மா அதிபர் மற்றும் அனைத்து பொலிஸ் உத்தியோகத்தர்கள், ஆயுதப்படையினரை அனைத்து சூழ்நிலைகளிலும் மிகுந்த நிதானத்துடன் செயற்படுமாறு அழைப்பு விடுத்துள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், எந்தவொரு வன்முறையும் நாட்டுக்கு கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என்று எச்சரித்துள்ளது. தொடர்ச்சி P2

### ரம்புக்கனை விவகாரம்

## சீ.ஐ.டியினரின் அறிக்கை இன்று சமர்ப்பிக்கப்படும்

**பொலிஸாருக்கு பரிந்துரை வழங்குகிறது ம.உ.ஆணைக்குழு**

ரம்புக்கனை துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பான குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் அறிக்கை, இன்றையதினம் (25) மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக ஆணைக்குழு அறிவித்துள்ளது. தொடர்ச்சி P2

### ஆசிரியர்கள், அதிபர்கள்

## சுகவீன விடுமுறை போராட்டம்

நாட்டில் நிலவும் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு உடனடி தீர்வைக் கோரி, அரச பாடசாலைகளின் ஆசிரியர்களும் அதிபர்களும், இன்றையதினம் (25) பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என ஆசிரியர் மற்றும் அதிபர்கள் தொழிற்சங்க கூட்டமைப்பு அறிவித்துள்ளது. தொடர்ச்சி P2



## பறை இசையுடன் இளைஞர்கள் காலி முகத்திடலுக்கு வந்தனர்

காலி முகத்திடலில் முன்னெடுக்கப்படும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், பல அமைப்புகளும் பலரும் இணைந்து கொண்டுள்ளனர்.

ஹட்டனில் இருந்து பாரம்பரிய பறை இசையுடன் வந்திருந்த மலையக இளைஞர்களும் ஜனாதிபதி செயலகத்தை நேற்று (24) மாலை வந்தடைந்தனர்.



PAGE 1 தொடர்ச்சிகள்

# பால்மா விலையும் 6 நாளில் அதிகரிக்கும்

பால்மாவுக்கான கட்டுப்பாட்டு விலை நீக்கப்பட்டுள்ளதால், பால்மா நிறுவனங்கள் விரும்பியவாறு விலையை அதிகரிக்க முடியும் எனத் தெரிவித்த அவர், பால்மா விலை எவ்வளவு ரூபாயால் அதிகரிக்கும் எனக் கூற முடியாது என்றார்.
ஒரு கிலோ கிராம் பால்மாவின் விலை 800 முதல் 1,000 ரூபாய் வரை அதிகரிக்கலாம் என சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# சவர்க்காரங்களின் விலையும் சடுதியாக அதிகரித்தது



இந்த விலை அதிகரிப்புடன் சலவைத் தூள் வகைகள், ஷம்போ, பற்தூரிகை என்பவற்றின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

# உணவுத் தட்டுப்பாடு நாட்டில் ஏற்படும்

சர்வதேச நாணய நிதியத்தின் விரைவான நிதி முயற்சிக்கு இலங்கை தகுதி பெறாததாலும், இந்திய கடன் வரி அடுத்த மாதம் முடிவடைவதாலும், பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான தனது வியூகங்களை அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

சில இலங்கை வங்கியாளர்கள், கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கு ஒன்றில் பேசிய அவர், பொருளாதாரம் மேலும் சீரழிந்து போவது குறித்தும் எச்சரித்தார்.

நிதி அமைச்சின் தலைமையிலான இலங்கை பிரதிநிதிகள் குழுவொன்று, சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து விரைவான நிதி முன்முயற்சி உதவியை கோரியபோதும், இலங்கை அத்தகைய தொகுப்புக்கு தகுதியற்றது என்று தெரிவிக்கப்பட்டது.

“இந்திய கடன் வரி அடுத்த மாதம் முடிவடையும். அதற்கு மேல் உர விநியோகமும் ஆபத்தை எதிர்கொள்கிறது. 30 சதவீதமான உரங்கள் ரஷ்யாவிலிருந்து வருவதால், அடுத்த அறுவடைக் காலத்திலும் இலங்கை ஒரு பிரச்சினையை எதிர்கொள்ளப் போகிறது. நாம் உணவுப் பற்றாக்குறையை சந்திக்கப் போகிறோம் என்றார்.

மேலும், நிலையான வைப்புத் தொகைகளில் வைத்திருக்கும் நிதிகளின் மதிப்பு, ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியங்கள் வைத்திருக்கும் நிதிகளின் மதிப்பு குறைந்தது 59 சதவீதம் குறையும் என்று சுட்டிக்காட்டினார்.

30 வயது நிரம்பிய ஒருவர் இந்தச் சூழ்நிலையிலிருந்து தப்பிக்க முடியும் என்றும் ஓய்வு பெறவிருக்கும் ஒரு நபர் எப்படி நிலைமையை சமாளிக்க முடியும் எனவும் கேள்வியெழுப்பினார்.

2020 இல் இந்தப் பொருளாதார நெருக்கடி பற்றி தாம் எச்சரித்தாகவும் 2021 இல் இலங்கை சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்ல வேண்டும் என்றும் கூறியதாகவும், ஆனால் அது நடக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

எனவே பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான எமது வியூகங்கள் குறித்து நாங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும்; மற்றும், பிழைப்புக்கான புதிய திட்டத்தை தொடங்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

# நாட்டுக்கு கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும்

அதிகளவான பொலிஸாரின் பிரசன்னம் மற்றும் காலி முகத்திடலுக்குச் செல்லும் வீதிகள் சிலவற்றின் தடைகள் காரணமாக, பாதசாரிகள் கூட பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

சில தடுப்புகளில் கூரிய முட்கள் பொருத்தப்பட்டுள்ளதுடன், கறுப்பு பொருளால் மூடப்பட்டிருக்கும் தடுப்புகள் மக்களுக்கு கடுமையான காயங்களை ஏற்படுத்தக்கூடும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, நிறைவேற்று அதிகாரம் தொடர்பில் அர்த்தமுள்ள பாராளுமன்ற கண்காணிப்பு இல்லாமை, அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை இல்லாமை என்பன தற்போதைய அமைதியின்மைக்கு காரணமாக அமைந்துள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும், அரசியல், பொருளாதார ஸ்திரத்தன்மையை உருவாக்குவதற்கான 13 யோசனைகளை முன்வைத்துள்ளது.

நிலவும் நெருக்கடியை முடிவுக்கு கொண்டு வருவதற்கு 18 மாதங்களுக்கு மாத்திரமே இடைக்கால தேசிய ஐக்கிய அரசாங்கமொன்றை ஸ்தாபிக்க வேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அவ்வாறு ஸ்தாபிக்கப்படும் அரசாங்கம் 6 மாதங்களுக்குள் தேர்தலொன்றை நடத்த வேண்டும் எனவும் பொதுத்தேர்தல் நிறைவடைந்த பின்னர் அரசாங்கத்தின் காலம் நிறைவுக்கு வரும் எனவும் அரசியலமைப்பு பேரவையின் அனுமதியின் படி மத்திய வங்கியின் ஆளுநரும் நிதிச்சபையும் நியமிக்கப்பட வேண்டும் எனவும் சட்டத்தரணிகள் சங்கம் சிபாரிசு செய்துள்ளது.

# முட்பொறி

மிகவும் பெரிய இரும்பு முட்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள இந்த தடுப்பானது உயிரைக் குடிக்கக் கூடியது என்பது குறிப்பிடத்தக்கது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் உட்பட பல தரப்பினரால் போராட்டங்கள் நடத்தப்பட்டிருந்த நிலையில், போராட்டம் ஆரம்பிப்பதற்கு பல மணி நேரத்துக்கு முன்னரே, ஜனாதிபதி செயலம் உட்பட முக்கிய பகுதிகளுக்குள் போராட்டக்காரர்கள் நுழையா வண்ணம் இரும்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இரும்பு வேலிகளால் பாதைகள் மறிக்கப்பட்டுள்ளதால் நடந்துவரும் பொதுமக்கள் பலர், இரும்பு வேலிகளுக்கு இடையே இருக்கும் இடைவெளியில் நுழைந்து வெளியேறியமையையும் அவதானிக்க முடிந்தது.
அம்பியூலன்ஸ், சுற்றுலாத்துறையினரை ஏற்றிவரும் வாகனங்கள் மற்றும் பொதுச் சேவைகளுக்கு இடமளிக்கும் வகையில், தடுப்பு வேலிகளை அகற்றுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் சுற்றாடல்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அறிவுறுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சீ.ஐ.டியினரின் அறிக்கை இன்று சமர்ப்பிக்கப்படும்

பொலிஸ்மா அதிபருக்கு இது தொடர்பில் அறிவித்துள்ளதாகத் தெரிவித்துள்ள ஆணைக்குழு, மனித உரிமைகளை பாதுகாத்து போராட்டங்களில் செயற்பட வேண்டிய முறை தொடர்பில் பொலிஸாருக்கு புதிய பரிந்துரைகளை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

பரிந்துரைகளை வழங்குவதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழு தலைவரின் மேற்பார்வையில், மூவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட பரிந்துரைகளுக்கு அமைய செயற்படுவதற்கு பொலிஸ்மா அதிபர் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

ரம்புக்கனை போராட்டத்தின் போது ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக பொலிஸ்மா அதிபர் அண்மையில் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்ட போது, இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அங்கிகரிக்கப்பட்ட மனித உரிமைகளுக்கு இணங்க, போராட்டங்களின் போது எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பிலான முறையான பொறிமுறை அவசியம் என இதன்போது உறுதியானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொலிஸாருக்கு புதிய நச்சுவளி தடுப்பு முகமூடி

எரிவாயு மற்றும் எரிபொருளைப் பெற்றுக்கொள்ள தமது பெற்றோர் சிரமப்படுவதாகவும் அதனாலேயே தாம் வீதிக்கு இறங்கியுள்ளதாகவும் போராட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர்.

பொலிஸாரைப் பார்த்து, பதவியேற்கும் போது செய்யும் சத்தியப்பிரமாணம் ஞாபகம் உள்ளதா எனவும் கேள்வியெழுப்பிய அவர்கள், வைத்தியசாலைகளில் மருந்து இல்லை, கண்ணீர்ப் புகையைத் தடுக்கும் முகமூடி இருக்கிறதா என்றும் கேள்வியெழுப்பினர்.

# நாலரை மணி நேர மின்வெட்டு

கொழும்பின் வர்த்தகப் பகுதிகளில் காலை 6.00 மணி முதல் 9.00 மணி வரை 3 மணித்தியாலங்கள் மாத்திரம் மின்சாரம் தடைப்படும் என இலங்கை மின்சார சபை மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரசாங்கத்துக்கு எதிராக அணி திரண்டனர்

நாட்டிலுள்ள அரச பல்கலைக்கழகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் இளைஞர்கள் பலர், கொழும்பு கோட்டையில் இருந்து காலி முகத்திடல் போராட்ட மைதானம் வரை பேரணியை முன்னெடுக்க தீர்மானித்திருந்தனர்.

எனினும், காலி முகத்திடலுக்குச் செல்லும் அனைத்து வீதிகளும் இரும்பு வேலிகளால் மறிக்கப்பட்டு பெருந்திரளான பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

எனினும், காலி முகத்திடலிலும் பலர் ஒன்று திரண்டு போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.

இதேவேளை, கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்ட போராட்டப் பேரணி, மருதானை ரயில் நிலையம், புஞ்சி பொரளை ஊடாக விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தை சென்றடைந்தது.

அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு பெருந்திரளான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்ததுடன், மாணவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் வாக்குவாதங்களும் இடம்பெற்றன.

அதன் பின்னர், அங்குள்ள தடுப்புகளை உடைத்துக்கொண்டு உள்நுழைய முயன்றமையால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டிருந்தது.

பிரதமர் இல்லத்தின் மதிலிலும் போராட்டக்கார்கள் சிலர், ஏறியதுடன் பலத்த கோஷங்களையும் எழுப்பிக்கொண்டிருந்தனர்.

### இலங்கையின் முயற்சிகளுக்கு

# ஐ.எம்.எ:ப் குழு ஆதரவு வழங்கும்

பொருளாதார திட்டத்தில் அதிகாரிகளுடன் நெருக்கமாக பணியாற்றுவதன் மூலமும், நெருக்கடிக்கு சரியான நேரத்தில் தீர்வு காண்பதற்கு ஆதரவாக ஏனைய அனைத்து பங்குதாரர்களுடன் ஈடுபடுவதன் மூலமும் இலங்கைக்கு ஐ.எம்.எஃப் ஆதரவளிக்கும் என்று நிதியத்தின் தகவல் தொடர்பு பிரிவு தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புடனான வேலைத்திட்டம் தொடர்பிலான ஆரம்பகட்ட தொழில்நுட்ப ரீதியிலான கலந்துரையாடல் சனிக்கிழமை (23) இடம்பெற்றுள்ளது.

அது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்குறிப்பிட்ட விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், மேலும் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது,

ஐ.எம்.எஃப் மற்றும் உலக வங்கியுடனான கலந்துரையாடலுக்கு இடையில், சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலீனா ஜோர்ஜிவா மற்றும் ஏனைய சிரேஷ்ட நிர்வாக உறுப்பினர்களை நிதி அமைச்சர் அலி சப்ரி மற்றும் மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தலைமையிலான பிரிதிநிதிகள் வாஷிங்டன் டிசியில் சந்தித்துள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புடனான வேலைத்திட்டத்துக்கான அதிகாரிகளின் கோரிக்கை தொடர்பில் ஏப்ரல் 18 முதல் 22 ஆம் திகதிக்கிடையில் இலங்கை தூதுக்குழு மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் குழுவினருக்கிடையில் பயனுள்ள தொழில்நுட்ப கலந்துரையாடல் இடம்பெற்றது.

இலங்கையின் அண்மைய பொருளாதார மற்றும் நிதி அபிவிருத்திகள் மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடியின் பாதகமான விளைவுகளை வறியவர்கள் மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்கள் எதிர்நோக்கியுள்ள பாதிப்பை குறைப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கை தொடர்பிலும், பொருளாதார ஸ்திரத்தன்மையை பழைய நிலைமைக்கு கொண்டுவருவதற்கான ஒத்திசைவான உத்திகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக இலங்கைக்கான தூதுக்குழுவின் தலைவர் மஷஹிரோ நொசாகி தெரிவித்துள்ளார்.

கடன் வழங்கியவர்களுடனான ஒத்துழைக்கும் கலந்துரையாடலில் ஈடுபடும் இலங்கை அதிகாரிகளின் திட்டத்தை ஐ.எம்.எஃப் வரவேற்றுள்ளதுடன், பொருளாதார சவால்களை எதிர்கொள்வதற்கான கொள்கை ரீதியிலான நடவடிக்கைகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

# சுகவீன விடுமுறை போராட்டம்

அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள், பாடசாலைக்கு சமூகமளிக்கமாட்டார்கள் என்பதால், பிள்ளைகளின் பாதுகாப்பு குறித்து பெற்றோர் அக்கறையுடன் செயற்படுமாறும், இன்றைய பொருளாதார நெருக்கடியுள்ள சூழலில் வீணான சிரமங்களைத் தவிர்க்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம் எனவும் இலங்கை ஆசிரியர் சங்க உப தலைவர் ஆ.தீபன் திலீசன், நேற்று (24) அறிவித்தார்.

நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தாவது;

வடமாகாண கல்வித் திணைக்களத்தால், குறித்த தினம் நடத்த தீர்மானிக்கப்பட்டிருந்த இடைநிலை பிரிவுக்கான பரீட்சைகளை வேறொரு தினத்துக்கு ஒத்திவைக்குமாறு கோரியுள்ளோம்.

எரிபொருள் பிரச்சினை தீர்க்கப்படாத நிலையில், மாற்றீடான எமது முன்மொழிவுகளை கல்வியமைச்சு நிராகரித்தமையின் விளைவாகவே, அதிபர்கள், ஆசிரியர்களால் சுகவீன லீவுப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

எரிபொருள் விலையேற்றம், எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, தூர இடங்களிலிருந்து வரும் மாணவர்களின் வரவு மிகவும் வீழ்ச்சியடைந்துள்ளது. பொருட்களின் தட்டுப்பாடும் விலையேற்றமும் குடும்ப பொருளாதார நிலையையும் மாணவர்களின் வரவையும் கணிசமாகப் பாதித்துள்ளன.

அத்துடன் தூர பிரதேசங்களுக்குச் சென்று கடமையாற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள் பொருளாதார நெருக்கடிகளை மட்டுமல்ல குடும்பச் சுமைகளுடன் போக்குவரத்துச் சிரமங்களையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

எரிபொருள் தட்டுப்பாடு நிலவும் சூழலில் கடமைகளுக்குச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வரிசையில் நின்றே நாட்டுமக்கள் தேவைகளைப் பூர்த்திசெய்யும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர்.

கஷ்ட, அதிகஷ்ட பிரதேசங்களில் கடமையாற்றும் ஆசிரியர்கள், எரிபொருள் தட்டுப்பாடான இன்றைய சூழலிலும் விரலடையாள இயந்திர நடைமுறைகளால் தொழில் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர்.

பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்டுள்ள சுமைகளைத் தாண்டி, எரிபொருள் பிரச்சினையால் கல்வித்துறை பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறது. இதனால், தூர இடங்களுக்கு சென்று பணிபுரியும் ஆசிரியர்களையும், கற்கும் மாணவர்களையும் அருகில் உள்ள பாடசாலைக்கு செல்லக் கூடிய ஏற்பாடுகளை செய்து தருமாறும் அல்லது மாற்று திட்டங்களை வழங்குமாறும், கல்வியமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடி இருந்தோம்.

எனவே, இவற்றுக்கான உடனடித் தீர்வை அரசாங்கம் வழங்கவேண்டும் என்பதை வலியுறுத்தி, இன்று நடைபெறும் சுகவீன லீவு போராட்டத்தில் அனைத்து அதிபர்கள், ஆசிரியர்களையும் ஈடுபடுமாறு கேட்டுக் கொள்வதுடன், அன்றைய தினம் மாணவர்களின் பெற்றோர் வீணான சிரமங்களைத் தவிர்க்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம் என, அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, அனைத்து அதிபர் ஆசிரியர்களும் ஒற்றுமையுடன் இன்று (25) நடைபெறும் சுகவீன லீவு போராட்டத்துக்கு ஆதரவு வழங்க வேண்டும் என ஆசிரியர் விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் என்.எ.எஸ். நாதன் அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

அவர் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில், “அனைத்து ஆசிரியர்களும் ஒன்றிணைந்து எரிபொருள் விலையேற்றம் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் என்பவற்றைக் கண்டித்து சுகவீன போராட்டத்தில் ஈடுபடுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

எரிபொருள் விலையேற்றத்தால் ஆசிரியர்கள்,அதிபர்கள் பாடசாலைக்கு செல்வதில் சிரமப்படுகின்றனர். இதனால் தூர இடங்களுக்கு சென்று பணிபுரியும் ஆசிரியர்களை அருகிலுள்ள பாடசாலைக்கு கடமையாற்றக் கூடிய செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு மத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் கவனத்துக்கு கொண்டு வந்திருக்கின்றோம்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம் என்பவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து நாடளாவிய ரீதியில் பல்வேறு விதமான போராட்டங்களில் மக்கள் ஈடுப்பட்டு வருகின்றனர். இப்போராட்டங்களுக்கு வலுசேர்க்கும் வகையிலும் இந்த அரசாங்கம் மக்களின் போராட்டங்களுக்கு செவிசாய்த்து மக்களின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்றார்.

# “இன்னும் சில நாள்களில் ஆட்சி கவிழும்”

தற்போதைய அரசாங்கம் இன்னும் சில நாள்களுக்கு மாத்திரமே ஆட்சியில் நீடிக்கும் எனத் தெரிவிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன, அரசாங்கத்தை விரைவில் ஐக்கிய மக்கள் சக்தி கைப்பற்றும் எனவும் தெரிவித்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்கக்கூடிய பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்து, பிரதமர் கலந்துரையாடியுள்ளார். இதில் வெறும் 88 பாராளுமன்ற உறுப்பினர்களே கலந்து கொண்டுள்ளனர். ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு 157 பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ள நிலையில், 70 சதவீதமானவர்கள் கூட மஹிந்தவுக்கு ஆதரவளிக்கவில்லை.

அரசாங்கத்திலிருந்து விலகியுள்ள கட்சிகளுடன் கலந்துரையாடி அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்றத்தில் கொண்டுவர உள்ளது. இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில், அனைவருடன் கலந்துரையாடி இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. எமக்கு மூன்றிலிரண்டு



பெரும்பான்மையை விட, அதிகமான பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு உள்ளது எனவும் கூறினார்.

எனவே, இன்னும் சில நாள்களுக்கே தற்போதைய அரசாங்கம் ஆட்சியில் இருக்கப்போகிறது. அடுத்த முறை நீங்கள் என்னை சந்திக்கும்போது, நாம் ஆட்சியில் அமர்ந்திருப்போம். ஆட்சியைக் கவிழ்க்க வருகிறோம். ஆனால், ஆட்சியில் பங்கெடுக்கப்போவதில்லை என்கிற நிலைப்பாட்டிலேயே நாம் இருந்தோம். பல்வேறு கருத்து வேறுபாடு கொண்டவர்களுடன் எவ்வாறு ஆட்சியமைப்பது என்கிற பிரச்சினை எமக்கு இருந்தது எனவும் தெரிவித்தார்.

## இந்தியாவே இலங்கையை நாசம் செய்தது

நாடு வங்குரோத்து நிலையை அடைந்துவிட்டது. இதிலிருந்து நாட்டை மீட்க முடியாதென தெரிவிக்கும் முன்னாள் கணக்காளர் நாயகம் காமினி விஜேசிங்க, சர்வதேச நாணய நிதியத்தைவிட இந்தியாவிடம் மேற்கொள்ளும் கொடுக்கல் வாங்கல்களே மிகவும் ஆபத்தானது. இலங்கை வேறெங்கிருந்தும் கடனைப் பெற முடியாத நிலையே காணப்படுகிறது. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து மாத்திரமே இப்போது கடனைப் பெற முடியும் எனவும் தெரிவித்தார்.

நாட்டில் காணப்படும் தவறுகளை சரிசெய்ய வேண்டும் என்றே சர்வதேச நாணய நிதியம் கூறுகிறது. 7 இலட்ச அரச ஊழியர்களை வைத்தே, நாட்டை முன்னொக்கிக் கொண்டு செல்ல முடியும். எனினும் தற்போது 15 இலட்ச அரச ஊழியர்கள் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரையும் சேவையிலிருந்து நீக்க முடியாது. எனினும் அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்க முடியும்.

நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை இலாபமடையச் செய்ய வேண்டுமென்றால் அதிலுள்ள அரசியல் தலையீடுகளை முதலில் நீக்க வேண்டும். அவ்வாறு செய்யும் பட்சத்தில் இந்த அரச நிறுவனங்களால் 6 மாதங்களுக்குள் இலாபமீட்ட முடியும்.

இவற்றைச் சரி செய்ய வேண்டுமென சர்வதேச நாணய நிதியம் கூறிவருகிறது. சர்வதேச நாணய நிதியத்திடம் கொடுக்கல் வாங்கல்களை செய்வதைவிட, இந்தியாவிடம் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வது பாரிய ஆபத்தானது.

2,500 வருடங்களாக இலங்கையை இந்தியாவே நாசம் செய்தது. இந்தியாவுக்கு, நாட்டைக் காட்டிக்கொடுப்பது மிகவும் ஆபத்தானது. நாடு முகங்கொடுத்திருக்கும் நெருக்கடி நிலைமைகளில் இருந்து, நாட்டை மீட்பதற்கு குறைந்தது 15 வருடங்கள் தேவைப்படும். குறைந்தது இடைக்கால அரசாங்கம் ஒன்றையாவது தற்போது அமைக்க வேண்டும். அதற்கு அதிகளவான செலவுகள் ஏற்படாது. அவ்வாறு செய்யும் பட்சத்தில் அரசியலமைப்பு மாற்றங்களை மேற்கொண்டு புதிய பாதைக்கு நாட்டை இட்டுச் செல்ல முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.



## டொலரை வைப்பிலிட புதிய கணக்கு

ஔடத இறக்குமதிக்காக வெளிநாட்டு உதவிகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் டொலரை வைப்பிலிடக்கூடிய புதிய கணக்கொன்றை அறிமுகப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

சம்பந்தப்பட்ட கணக்குக்குத் தேவையான அனுமதியைப் பெறுவதற்கான கோரிக்கை, நிதி அமைச்சில் முன்வைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் நன்கொடைகளுடன் தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு பொறுப்பான ஒருங்கிணைப்பாளர் விசேட வைத்திய நிபுணர், வைத்தியர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.



ஔடத இறக்குமதிக்கு தேவையான டொலரை நன்கொடையாக வழங்க விரும்பும் வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் மற்றும் எந்தவொரு தரப்பினரும், இந்தப் புதிய கணக்கிற்கு டொலரை அனுப்ப முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா, பங்களாதேஷ், இந்தோனேசியா, தாய்லாந்து, சீனா, சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளுடன் இலங்கைக்கு தேவையான மருந்துகளை கொள்வனவு செய்வது தொடர்பிலான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதனிடையே, உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றுடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கட்டார், ஐக்கிய அரபு இராச்சியம், அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளில் வசிக்கும் இலங்கையர்களும் இலங்கைக்கு மருந்துகளை பெற்றுக்கொள்வதற்கான உதவிகளை வழங்கியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் பலி

பெலியத்த, நிஹிலுவ பகுதியில் வீடொன்றுக்குள் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அந்த வீட்டில் வசிப்பவர், மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்துள்ளார். அவர், பின்னாலேயே வந்த இனந்தெரியாத நபரே, துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு தப்பிச்சென்றுள்ளார் என தெரிவித்தனர்.

சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார். துப்பாக்கிச்சூடு நடத்தியமைக்கான காரணம் இதுவரையிலும் கண்டறியப்படவில்லை எனத் தெரிவித்த பெலியத்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தமிழரசுக் கட்சியின் மேதினத்தை இரண்டு இடங்களில் நடத்த முடிவு

தமிழரசுக் கட்சியின் மே தினத்தை, இரண்டு இடங்களில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. வடக்கில் கிளிநொச்சியிலும் கிழக்கில், மட்டக்களப்பிலும் மே தினத்தை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

தந்தைசெல்வாவின் 45 ஆவது நினைவு தினம் மற்றும் மே தினம் தொடர்பான கலந்துரையாடல் தமிழரசுக் கட்சியின் யாழ். அலுவலகத்தில் நேற்று (24) நடைபெற்றது.

கூட்டம் நிறைவில் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது,

இலங்கை தமிழரசுக் கட்சியின் உயர்மட்ட குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக, கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பிலும் வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சியிலும் உலக தொழிலாளர் தினத்தை எழுச்சியுடன் மேற்கொள்வது என்ற தீர்மானம் எட்டப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் 10 தேர்தல் தொகுதிகளில் இருந்தும்



மேதின ஊர்திகள், கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியை வந்தடையும். பின்னர் அனைத்து ஊர்திகளும் ஊர்வலமாக டிப்போ சந்தியில் இருக்கின்ற பூங்காவை வந்தடைந்தடையும். அதன் பின்னர், தொழிலாளர் தின எழுச்சி கூட்டம் நடைபெறும் என்றார்.

குறித்த கலந்துரையாடலில், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி கேசவன் சயந்தன், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், சாவகச்சேரி நகர சபைத் தவிசாளர் சிவமங்கை இராமநாதன், சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் வாமதேவன், யாழ். வர்த்தக சங்க தலைவர் ஜெயசேகரம் எனப் பலரும் கலந்து கொண்டனர்.




## கொழும்பில்



ஜனாதிபதியையும் இந்த அரசாங்கத்தையும் பதவி விலகக்கோரி, அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் கொழும்பில் நேற்று (24) மாபெரும் எதிர்ப்பு பேரணி நடத்தப்பட்டது. அந்தப் பேரணி, கொழும்பு-7 விஜேராம மாவத்தையில் உள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தை நோக்கிச் சென்றது.

‘இளைஞர்களின் கனவுகளுக்கு இறுதி ஊர்வலம்’ எனும் தொனிப்பொருளில் ஆரம்பிக்கப்பட்ட அந்தப் பேரணியில், சுமார் 3,000 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றிருந்தனர். இதனால் கொழும்பு, கோட்டை உள்ளிட்ட பல இடங்களிலும் கடுமையான வாகன நெரிசல்கள் காணப்பட்டன.

போராட்டத்தைத் தடுப்பதற்கு பல்வேறு வகையிலும் தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இதில், பொதுமக்கள், சுற்றுலா பயணிகள் உட்பட பலரும் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்தனர். பஸ்கள் வேறு திசைகளில் திருப்பிவிடப்பட்டமையால் பயணிகள் சிலர் இறக்கிவிட்ட இடத்திலேயே திகைத்துநின்றனர்.









(படங்கள்: சமூக வலைத்தளங்கள்)

உடனடிச் செய்திகளைத் தமிழ் மொழியில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணைந்திருங்கள்

தமிழ்Mirror பதிவு செய்வதற்கு

Dialog Type TM and send to 87798 Daily Rs.1/=+TAX

HUTCH Type TM and send to 2233 Monthly Rs.30/=+ TAX

SLTMOBITEL Type REG TM and send to 77012 Daily Rs.1/=+TAX



# அரிசி வாங்கும் முன் பையை வாங்கணுமாம்

## பொதுமக்கள் குற்றச்சாட்டு

■ எப்.முபாரக்



லங்கா சதொச நிறுவனத்தின் ஊடாக, சலுகை விலையில் அரிசி விநியோகிக்கப்படும் என அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், நிபந்தனைகளின் அடிப்படையிலேயே அங்கு அரிசி விற்பனை செய்யப்படுவதாக பொதுமக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

திருகோணமலையில் அமைந்துள்ள லங்கா சதொச நிறுவனத்தில் வெள்ளி, சனி ஆகிய கிழமைகளில், காலை முதல் நீண்ட வரிசையில் காத்திருந்தே மக்கள் அரிசியை கொள்வனவு செய்தனர்.

இவ்வாறு அரிசி விற்பனை செய்யப்படும் போது, பல நிபந்தனைகள் விதிக்கப்படுவதாகவும் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

மூன்று வகையான அரிசி வகைகளில், ஒருவருக்கு ஐந்து கிலோ கிராம் வீதம் விநியோகிக்கப்படுகின்றது. அவ்வாறு அரிசியை கொள்வனவு செய்யும் முன்னர், 10 ரூபாய் பெருமதியான பை ஒன்றையும் கொள்வனவு செய்ய வேண்டுமென நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

அரிசியை கொள்வனவு செய்ததன் பின்னர், வேறு பொருட்களும் கட்டாயமாக கொள்வனவு செய்ய வேண்டும் எனவும் கட்டாயப்படுத்துவதாகவும் வாடிக்கையாளர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

லங்கா சதொச நிறுவனத்தில் மட்டுமன்றி ஏனைய வர்த்தக நிலையங்களிலும், பொருட்களை கொள்வனவு செய்ததன் பின்னர், வேறு சில பொருட்களை வாங்குமாறு வர்த்தகர்கள் கட்டாயப்படுத்துவதாக நுகர்வோர் குற்றஞ்சாட்டுக்கின்றனர்.

அரச நிறுவனமொன்றில், இடம்பெறும் இவ்வாறான முறைக்கேடுகள் தொடர்பில், அதிகாரிகள் கண்டுகொள்ளாமல் இருக்கின்றனர் என்றும் நுகர்வோர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

# சிலிண்டர் அபகரிப்பு; ஒருவர் சிக்கினார்

## மூவருக்கு வலை விரிப்பு

■ எம்.றொசாந்த்



"சனிக்கிழமை (23) இரவு 9 மணியளவில்,யாழ். கஸ்தூரியார் வீதியில் சிலிண்டருடன் சென்று கொண்டிருந்த ஒருவரை வழிமறித்த நால்வர், தங்களை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் எனக்கூறி, அவரிடமிருந்த பணம் மற்றும் சிலிண்டரை அபகரித்துச் சென்ற சம்பவத்தில், சில மணி நேரத்துக்குள் ஒருவர் கைது செய்யப்பட்டார்

எரிவாயுடன் கொள்வனவு செய்யப்பட்ட சிலிண்டருடன் சென்று கொண்டிருந்த ஒருவரை வழிமறித்த சிலர், தங்களை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் எனக்கூறி, அவரை அச்சுறுத்தி, அவரிடமிருந்த பணம் மற்றும் சிலிண்டரை அபகரித்துச் சென்ற சம்பவமொன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

யாழ். கஸ்தூரியார் வீதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், தப்பிச் சென்ற நால்வரில் ஒருவர், சில மணி நேரத்துக்குள் கைது செய்யப்பட்டார். ஏனைய மூவருக்கும் வலை விரிக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

சனிக்கிழமை (23) இரவு 9 மணியளவில் இடம்பெற்ற சம்பவத்துக்குப்பின்னர், கைது செய்யப்பட்டவரிடமிருந்து எரிவாயு சிலிண்டரும் 25 ஆயிரம் ரூபாய் பணம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவரால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

கந்தர்மடத்தைச் சேர்ந்த 20 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டார். ஏனைய மூவரையும் தேடி வருவதாகப் பொலிஸார் கூறினர்.

# போர்த்தேங்காய் திருவிழா



■ சகா

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்றான போர்த்தேங்காய் உடைக்கும் திருவிழா, திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோவில் முன்றலில் நடைபெற்றது.

பிரதேச பொதுமக்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் பாரம்பரிய நிகழ்வில், இளைஞர்களுக்கான கயிறு இழுத்தல், சிறுவர்களுக்கான பணிஸ் உண்ணுதல்,பலூன் உடைத்தல், வாயில் தேசிக்காய் ஏந்தி நடத்தல் போன்ற போட்டிகளும் இடம்பெற்றன. வெற்றி பெற்றவர்களுக்கு திருக்கோவில் ஸ்ரீ முருகன் ஸ்ரோஸ் நிதி அனுசரணையில் பரிசுகளும் வழங்கப்பட்டன.

# ஊக்குவிப்புத் தொகை வழங்கிவைப்பு

■ நூருல் ஹுதா உமர்



கலை மன்றங்களுக்கான வருடாந்த ஊக்குவிப்புத் தொகை கொடுப்பனவு, இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம். ரஷ்ஷான் தலைமையில் நடைபெற்றது.

நலிவுற்ற நிலையில் இருக்கின்ற கலைஞர்களைப் பேணிக் காத்தல், போசணையளித்தல், பொருளாதார ஆற்றலை வளர்த்தல், அவர்களை கௌரவப்படுத்தல் உள்ளிட்ட செயற்பாடுகளை கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுகின்றது.

அந்தவகையில், இறக்காமம் பிரதேச செயலக பிரிவில் இயங்கிவரும் அய்மன், சன்ரைஸ், இஸ்லாமிய மரபுரிமைகள் கலாசார, மீரா கோலாட்டக் குழு ஆகிய கலை மன்றங்களுக்கே உதவித் தொகைகள் வழங்கிவைக்கப்பட்டன.

# உலருணவு பொதிகள் வழங்கி வைப்பு

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்




காத்தான்குடி இஸ்லாமிய செவிப்புலன் வலுவற்றோர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ரமழான் நோன்புக்கான உலருணவுப் பொதிகள் 45 பேருக்கு, நேற்று (24) வழங்கி வைக்கப்பட்டன.

காத்தான்குடி மில்லத் மகளிர் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற இந்த வைபவத்துக்கு ஒன்றியத்தின் தலைவர் எம்.எம் ஜமீல் தலைமை தாங்கினார். காத்தான்குடி நகரசபை தவிசாளர் எஸ்.எச். அஸ்பர், ஆலோசகர் மௌலவி ஏ.எல்.ஆதம்லெவ்வை ஒன்றியத்தின் உபதலைவர் பி.எம்.எம்.ம் ஹாலிதீன், செயலாளர் ஆசிரியர் ஏ.எல். எம்.மபாஸ், பொருளாளர் எம்.எல்.ஜெயினுதீன், காத்தான்குடி மில்லத் மகளிர் வித்தியாலய அதிபர் திருமதி ஜெசிமா முசம்மில் உட்பட ஒன்றியத்தின் பிரமுகர்கள் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.



# ஊடகவியலாளர் மோகனதாஸ் காலமானார்

■ வ.சக்திவேல், எம்.என்.எம்.அப்ராஸ்

மட்டக்களப்பு, துறைநீலாவணை கிராமத்தை சேர்ந்த ஆசிரியரும், ஊடகவியலாளருமான பாக்கியராசா மோகனதாஸ் சனிக்கிழமை (23) இறைபதம் எய்தினார். இறக்கும் போது அவருக்கு வயது 34 ஆகும்.

பாக்கிராசா சிவராணி தம்பதிகளின் மூத்த புதல்வரான இவர், சம்மாந்துறை மத்திய கல்லூரியில் (தேசிய பாடசாலை) ஆசிரியராக கடமையாற்றி வருகின்றார்.

ஊடகத்துறையில் செய்திகளை மட்டுமன்றி பல கட்டுரைகளையும் எழுதி, பல தடங்களில் தன்னைப் பதிவு செய்துகொண்டுள்ளார். இவருக்கு கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் இளம் கலைஞர் விருது வழக்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

துறைநீலாவணை தேசிய பாடசாலை, கிழக்கு பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியற்கலை நிறுவனத்தின் பழைய மாணவரான இவர், 74 கலைப் படைப்பாளிகளை நேர்காணல் செய்து 'படைப்பாக்கல் ஆளுமைகள்' எனும் நூலை திருகோணமலையில் வைத்து கடந்தமாதம் வெளியீட்டு வைத்தார்.

சுகவீனம் காரணமாக, மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர், சிகிச்சை பலனின்றி காலமானார்.

இதேவேளை, இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் தலைவரும் இலக்கிய விமர்சகருமான ஜெஸ்மி எம்.மூஸா விடுத்துள்ள இரங்கல் செய்தியில், 'ஆசிரியர், ஊடகவியலாளர், கட்டுரையாளர், நேர்முகவியலாளர், நாடக ஆற்றுகைக் கலைஞர் எனத் தான் சார்ந்துள்ள துறைகளில் ஓர்இன உறவு விரும்பியாகச் பாக்கியராஜா மோகனதாஸ் செயற்பட்டார்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

# எரிபொருள் நெருக்கடிக்குள் உழவுவேலைகள் ஆரம்பம்

■ சகா





நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில், அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கைக்கான உழவுவேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

எனினும், அதற்கான செலவுகளும் பாரியளவில் அதிகரித்துள்ளன.

உழவு வேலைக்கென எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அரசாங்க அதிபரின் ஆலோசனைக்கமைவாக பிரத்தியேக வரிசையில் வைத்து மட்டுப்படுத்தப்பட்ட அளவில் டீசல் விநியோகிக்கப்படுகின்றன.

1 லீற்றர் டீசல் 340 ரூபாயாக அதிகரித்துள்ளமையால், ஓர் ஏக்கர் உழுவதற்கு உழவு இயந்திரத்துக்கான கூலி 6,000 ரூபாயிலிருந்து 12,000 ரூபாயாக அதிகரித்துள்ளது. டீசல் பிரச்சினையால் உழமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என பல உழவு இயந்திரக்காரர்கள் தெரிவிக்கின்றனர்.

விதைப்பதற்கான கூலி 1,500 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாக அதிகரித்துள்ளது. அதேவேளை, வரம்பு கட்டுவதற்கான கூலி 2,000 ரூபாயிலிருந்து 2,500 ரூபாக அதிகரித்துள்ளது. 1 புசல் விதை நெல்லுக்கு 1,000 ரூபாயால் கூடியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கடந்த முறையைப் போலவே, இரசாயனப் பசளை இம்முறையும் கிடைக்கவில்லை. எனினும், கடந்த தடவை கள்ளச்சந்தையில் 1 மூடை யூரியா 35ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்பட்டது. யூரியா இட்டு நெற்செய்கையில் ஈடுபட்டவர்களுக்கு விளைச்சல் அதிகமாகவிருந்தது. யூரியா இம்முறை 50ஆயிரம் ரூபாய் வரை அதிகரித்துள்ளது. அதுவும் கிடைக்கவில்லை என யூரியாவுக்கு பழக்கப்பட்ட விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

# திக்கத்தில் கோடாலி கொத்து

■ எம். றொசாந்த்



மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், வீதியால் சென்று கொண்டிருந்த குடும்பஸ்தரை வழிமறித்து கோடாலியால் கொத்தி விட்டு, தப்பிச் சென்றுள்ள சம்பவமொன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை, திக்கம் பகுதியில் சனிக்கிழமை (23) இடம்பெற்ற இச்சம்பவத்தில் அப்பகுதியை சேர்ந்த 44 வயதான குடும்பஸ்தரே, கோடாலி கொத்து காயங்களுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவித்த பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

# சத்தியப்பிரமாணம்



கிளிநொச்சியைச் சேர்ந்த சமூக சேவையாளரான கிட்ணன் சந்திரமோகன், அகில இலங்கை சமாதான நீதவானாக கிளிநொச்சி மாவட்ட நீதவான் எஸ். லெனின்குமார் முன்னிலையில் சத்திய பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

# வாள் வெட்டுக்கு இலக்கானவர் கொழும்புக்கு மாற்றம்

■ எஸ் தில்லைநாதன்



வாள் வெட்டுத் தாக்குதலுக்கு இலக்கான இளம் குடும்பஸ்தர், யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதன் பின்னர், மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

திக்கம், அல்வாய் வடமேற்கு பகுதியில் சனிக்கிழமை (23) இடம்பெற்ற இச்சம்பவத்தில் கைலாசபிள்ளை அன்ரன் இராசநாயகம் (வயது 44) எனும் இளம் குடும்பஸ்தரே வாள் வெட்டுக்கு இலக்காகியுள்ளார்.

தன்னை ஒருவர், இரண்டு தினங்களாக பின்தொடர்ந்து வந்த நிலையில், கடந்த சனிக்கிழமையும் பின்தொடர்ந்துள்ளார். அதனை அவதானித்ததன் பின்னர், தன்னை பின்தொடர்வதற்கான காரணத்தை கேட்டுள்ளார். அதன்போதே, பின்தொடர்ந்து வந்தவர், தான் மறைத்து வைத்திருந்த வாளை எடுத்து, சரமாரியாக வெட்டியுள்ளார்.

இரண்டு கைகளிலும் பலத்த காயமடைந்து, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு, அங்கிருந்து கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்படுள்ளார்.

சந்தேக நபரை அடையாளம் காணும் வகையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.



# மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு

■ எஸ் தில்லைநாதன்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அத்தியாவசிய மருந்துகள் உள்ளிட்ட பல மருந்து வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக வைத்தியசாலை தரப்புகள் தெரிவித்துள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் காரணமாக, நாடளவிய ரீதியில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் 73 அத்தியாவசிய மருந்துகள், சத்திர சிகிச்சைக்குத் தேவையான 13 மருந்துகள், அவசரமாக தேவைப்படும் 53 வீதமான மருந்துகள் மற்றும் ஆய்வு கூடத்துக்குத் தேவையான 6 மருந்துகள் என்பவற்றுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதிய நிர்வாக தெரிவு



■ எஸ் தில்லைநாதன்

வடமராட்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவு சங்கத்துக்கான புதிய நிர்வாக தெரிவு, சங்க மாநாட்டு மண்டபத்தில் முன்னாள் தலைவர் சிவலிங்கம் சிறிகலாதன் தலைமையில், நேற்று (24) காலை 11 மணியளவில் நடைபெற்றது.


புதிய தலைவர் த.தங்கரூபனுடன், ஆறு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்றதாக கூறப்படும் மோசடிகள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள பொதுச்சபை உறுப்பினர் இ.முரளீதரன் தலைமையில் ஐவர் கொண்ட விசாரணை குழுவும் நிறுவப்பட்டது.

வடமராட்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் வளர்ச்சிக்கு தடையாகவும், இவ்வளவு கடன் ஏற்பட காரணமாகவும் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களமே இருந்ததாகவும் இங்கு கருத்து தெரிவித்த பலரும் குற்றஞ்சாட்டினர்.

# தீவகப் பகுதி மக்களுக்கு இடர்கால உலருணவு

■ றொசேரியன் லெம்பட்



உலருணவுப் பொருட்கள் அடங்கிய பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன.

யாழ்.தீவகப் பகுதிகளில் வறுமைக் கோட்டின் கீழுள்ள குடும்பங்களுக்கும் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்குமான இடர் கால உலருணவுப் பொதிகள், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் சனிக்கிழமை (23) வழங்கி வைக்கப்பட்டன.

தீவு பகுதியில் உள்ள பிரதேச செயலாளர், கிராம சேவையாளர்கள், சமூக பணியாளர்களுடன் இணைந்து அல்லைப்பிட்டி, மண்டைதீவு, புங்குடுதீவு, வேலணை, சரவணை, நயினாதீவு, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு போன்ற பகுதிகளுக்கு அங்குள்ள கிராம சேவையாளர்களால் தெரிவு செய்யப்பட்ட 300 குடும்பங்களுக்கு தலா 3,350 ரூபாய் பெறுமதியான அத்தியாவசிய

நாட்டில் தற்போது நிலவி வருகின்ற உணவுத் தட்டுப்பாடு, உணவுப் பொருட்களுக்கான விலையேற்றம் காரணமாக வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் பாரியளவு பாதிக்கப்பட்டுள்ளன.

இதனை கருத்தில் கொண்டு மன்னார், வவுனியா, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களுக்கு நிவாரண பணிகள் நடைபெற்று வரும் நேரத்தில், தீவக மக்களின் நலனை கருத்தில் கொண்டு நிவாரணப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

சுகவீன விடுமுறை போராட்டத்துக்கு

# ஒத்துழைக்கவும்

## ஆசிரியர் விடுதலை முன்னணி கோரிக்கை

■ பி.கேதீஸ்

இன்று (25) நடைபெறும் சுகவீன விடுமுறை போராட்டத்திற்கு சகல அதிபர், ஆசிரியர்களும் ஆதரவு வழங்க வேண்டும் என ஆசிரியர் விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் என்.எ.எஸ்.நாதன் அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

அவர் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில்,

அனைத்து ஆசிரியர்களும் ஒன்றிணைந்து, எரிபொருள் விலையேற்றம், அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் என்பவற்றைக் கண்டித்து சுகவீன போராட்டத்தில் ஈடுபடுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

எரிபொருள் விலையேற்றத்தால் ஆசிரியர்கள்,அதிபர்கள் பாடசாலைக்கு செல்வதில் சிரமப்படுகின்றனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம் என்பவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து நாடளாவிய ரீதியில் பல்வேறு விதமான போராட்டங்களில் மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்போராட்டங்களுக்கு வலுச்சேர்க்கும் வகையிலும் இந்த அரசாங்கம் மக்களின் போராட்டங்களுக்கு செவிசாய்த்து, மக்களின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும். எனவே எமக்கு உடனடி தீர்வை அரசு வழங்க வேண்டும் எனக் கோரி எமது எதிர்ப்பை வெளிக்காட்ட அதிபர்கள்,ஆசிரியர்கள் அனைவரும் சுகவீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபடுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.



# மலையகம் எங்கும் எதிர்ப்பு...

அத்தியாவசிய பொருட்களின் விலையுயர்வுக்கும், அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கும் எதிர்ப்புத் தெரிவித்து நேற்றும் (24) மலையகத்தின் பல பிரதேசங்களிலும் எதிர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

(மலையக நிருபர்கள்)

















இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமாரின்

## வீட்டுக்கு பலத்த பாதுகாப்பு

■ ரஞ்சித் ராஜபக்ஷ

தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கால்நடைகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக அண்மையில் பதவியேற்ற பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அரவிந்தகுமாரின் வீட்டுக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

லிந்துலை- மெராயா பகுதியில் உள்ள அமைச்சரின் வீட்டுக்கு முன்பாக, பிரதேச இளைஞர்கள் எதிர்ப்பு நடவடிக்கையை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருவதால், இவ்வாறு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதார சிக்கல், பொருட்களின் விலையேற்றம் உள்ளிட்ட பல பிரச்சினைகள் காணப்படும் நிலையில், இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் சுயநலமாக அமைச்சுப் பதவியைப் பெற்றுள்ளதாகவும் எனவே, உடனடியாக பதவியிலிருந்து, அவர் பதவி விலக வேண்டும் எனத் தெரிவித்தே இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தம்புள்ளை பிரதேசத்தில்

# பெரிய வெங்காய செய்கை வீழ்ச்சி

■ காஞ்சன குமார



எரிபொருள் விலையேற்றம், உரம் இன்மை, உற்பத்திச் செலவு அதிகரிப்பு உள்ளிட்ட பல காரணங்களால் இம்முறை பெரிய வெங்காய உற்பத்தி 90 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாக தம்புள்ளை தேசிய பெரிய வெங்காய உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக தம்புள்ளை, சிகிரியா, கலேவல, நாவுல உள்ளிட்ட பிரதேசங்களில் பெரிய வெங்காய செய்கை முன்னெடுக்கப்படுவதுடன், குறித்த செய்கைக்கு தேவையான நீரைப் பெற்றுக்கொள்ள பயன்படுத்தப்படும் இயந்திரங்களுக்கான எரிபொருளைப் பெற்றுக்கொள்வதில் உற்பத்தியாளர்கள் சிக்கலை எதிர்நோக்கியுள்ளனர்.

தம்புள்ளை பிரதேசத்தில் தமிழ்-சிங்கள புத்தாண்டு நிறைவடைந்த உடனேயே பெரிய வெங்காய செய்கை ஆரம்பிக்கப்படும் நிலையில், தற்போது தம்புள்ளை பகுதியில் இதுவரை பெரிய வெங்காய உற்பத்திக்கான எந்தவொரு திட்டமும் உற்பத்தியாளர்களால் முன்னெடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கின்றனர்.

# அன்பளிப்பு

■ பி.கேதீஸ்

கொம்போட் நிறுவனத்தின் அனுசரணையில், தலவாக்கலை சிமினார் ஆலயத்தினூடாக தலவாக்கலை -கிறேட்வெஸ்டன் பாடசாலைக்கு கற்றல், விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதன்போது பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம்.பாரீஸ்,பிரதி அதிபர் விஜயசுந்தரம், தலவாக்கலை சிமினார் ஆலயத்தின் இயக்குநர் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்துக்கொண்டனர்.

ஆசிரிய தொழிற்சங்கங்களுடன்

# கலந்துரையாடல்

■ பி.கேதீஸ்

மத்திய மாகாண ஆசிரியர் கூட்டு தொழிற்சங்கங்களுக்கும் மத்திய மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் மத்திய மாகாண கல்வி அமைச்சில் நடைபெற்றது.

இதன்போது ஆசிரியர் விடுதலை முன்னணியின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் என்.டி.எஸ். நாதன் கலந்துகொண்டு, மத்திய மாகாணத்தில் அதிபர், ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடினார்.

இக்கலந்துரையாடலில் ஆசிரியர் விடுதலை முன்னணி உட்பட 13 ஆசிரியர் தொழிற்சங்கங்கள் கலந்துகொண்டன.

ஹட்டன் ஆர்ப்பாட்டத்துக்கு

# வர்த்தகர்கள் கடும் எதிர்ப்பு

■ ரஞ்சித் ராஜபக்ஷ



அரசாங்கத்துக்கு எதிராக ஹட்டனில் நேற்று (24) முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கு ஹட்டன் நகர வர்த்தகர்கள் எதிர்ப்பினை தெரிவித்துள்ளதுடன், ஆர்ப்பாட்டக்காரர்களுடன் முரண்பட்டுள்ளனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களால் போக்குவரத்து பாதிப்பு மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு வருகைத் தரும் நுகர்வோருக்கு அசௌகரியம் ஏற்படுவதாகத் தெரிவித்த வர்த்தகர்கள், வீதியை மறித்து ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க, தாம் இடமளிக்கப் போவதில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்கள் நியாயமானதென்றாலும் மக்களின் அன்றாட செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்குமாறு, ஹட்டன் நகர வர்த்தகர்கள் ஆர்ப்பாட்டக்காரர்களிடம் வலியுறுத்தியுள்ளனர்.

# கொஸ்லாந்தை நபர் கொழும்பில் சடலமாக மீட்பு

கத்தியால் குத்தப்பட்ட நிலையில், வெல்லபிட்டி, மீதொட்டுமுல்ல பிரதேசத்திலுள்ள பேக்கரி ஒன்றிலிருந்து நபரொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கொஸ்லாந்தை பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் போதே, உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொலைக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை என்று தெரிவித்துள்ள பொலிஸார், சந்தேகநபர் சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும், அவரைக் கைதுசெய்வதற்கான விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

கந்தப்பளையில்

# பெட்ரோல் விநியோகம்

■ ஆ.ரமேஸ்

கந்தப்பளை,இராகலை ஆகிய நகரங்களில் உள்ள ஐஓசி,மற்றும் கூட்டுறவு சங்க எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இரண்டு வாரங்களுக்குப் பின்னர் நேற்றுமுன்தினம் (23) பெட்ரோல் விநியோகிக்கப்பட்டது.

பெட்ரோலை பெற்றுக்கொள்வதற்கு சாரதிகள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

இதேவேளை, 1,500 ரூபாய்க்கு கேன்களில் பெட்ரோல் வழங்கப்பட்டதுடன், வாகனங்களுக்கு எவ்வித மட்டுபாடுகளுமின்றி விநியோகிக்கப்பட்டதாக எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர்கள் தெரிவித்தனர்.




# கினிகத்ஹேனையில் மண்மேடு சரிவு

■ ரஞ்சித் ராஜபக்ஷ



ஹட்டன்- கொழும்பு பிரதான வீதியின் கினிகத்ஹேனை பகுதியில், மண்மேடு சரிந்து விழுந்ததால், ஒரு வழிப்பாதையாக மட்டுப்படுத்தப்பட்டிருந்த அந்த வீதியூடான போக்குவரத்து வழமைக்கு கொண்டு வரப்பட்டதாக கினிகத்ஹேனை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் (23) மாலை தொடக்கம் அப்பகுதியில் தொடர்ச்சியாக மழை பெய்து வரும் நிலையில், கினிகத்ஹேனை நகரம் மற்றும் கினிகத்ஹேனை பிரதேச செயலகம் ஆகியவற்றுக்கு இடைப்பட்ட பகுதியில், நேற்று (24) அதிகாலை இந்த மண்மேடு சரிந்து விழுந்ததாக கினிகத்தஹேனை பொலிஸார் தெரிவித்தனர்.

சரிந்து விழுந்துள்ள மண்மேடு மற்றும் கற்களை அகற்றும் பணிகள், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணியாளர்களால் முன்னெடுக்கப்பட்டதுடன், போக்குவரத்தும் வழமைக்கு கொண்டு வரப்பட்டது.

# கங்குகள் கனன்று கொண்டிருப்பதால், தீ மூட்டுவதை தவிருங்கள்

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் கொதிநிலைக்குச் சென்று கொண்டிருக்கின்றன. எங்குப் பார்த்தாலும் ஏதோவொரு தரப்பினர், தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்து, ஆதங்கத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். தனிமனித போராட்டமும் நடத்தப்படுகின்றது.

காலிமுகத்திடலில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம், வடக்கு, கிழக்கிலும் வியாபித்துவிட்டது. 'கோட்டா கோ ஹோம்' போராட்டம் இராப்பகலாக இடம்பெறுகின்றது. சுமார் 15 நாள்களைத் தாண்டியும், அங்கு, அரசாங்கம், ஜனாதிபதிக்கு எதிரான எதிர்ப்புக் குரல்கள் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன.

அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு அதிகரிக்கப்பட்டமையால், பொருட்களின் விலைகளும் சேவைகளின் கட்டணங்களும் அதிகரித்தன. இதனால், தங்களுடைய ஜீவியத்தை கொண்டுநடத்த முடியாது மக்கள், வீதிக்கு இறங்கிக்கொண்டிருக்கின்றனர்.

இறக்குமதிச் செய்யப்படும் பால்மாவின் விலை, மீண்டுமொரு தடவை அதிகரிக்கப்படுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது. இது, இன்னுமின்னும் சுமையை அதிகரிக்கும். வீதிகளை மறித்தே போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அப்போதுதான், பொதுப் போக்குவரத்துச் சேவைகள் ஸ்தம்பிதமடையும். அதனூடாக அரசாங்கத்துக்கு அழுத்தங்கள் ஏற்படும்.

இந்நிலையில், அதிபர், ஆசிரியர் சங்கங்கள் இணைந்து இன்றையதினம் சுகவீன விடுமுறை போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளன. இதனால், பாடசாலை நடவடிக்கைகள் யாவும் முழுமையாக ஸ்தம்பிதமடையும். ஏனைய துறைகளைச் சார்ந்தவர்களும் போராட்டங்களை முன்னெடுப்பதற்குத் தீர்மானித்துள்ளனர்.

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம் பல்வேறு தளங்களில், பல கோணங்களில் முன்னெடுக்கப்படுகின்றன. தீப்பந்தங்கள் ஏந்தப்படுகின்றன; ஒளியூட்டப்படுகின்றது; இதற்கிடையே வீதிகளில் டயர்கள் கொளுத்தப்படுகின்றன. இதனால் சுற்றாடலுக்கு பாரிய தீங்கு விளைவிக்கப்படுகின்றது. தாங்கள் பயன்படுத்தும் வீதிகளைச் சேதமாக்கிக் கொள்கிறார்கள். அந்தக் கங்குகள் கனன்று கொண்டே இருக்கும்.

போராட்டத்தின் கங்குகள் கனன்று கொண்டிருப்பதால், தீ மூட்டுவதை தவிர்ப்பதே உசிதமாகும். மிரிஹானையில் பஸ்ஸுக்கு அரசாங்கமே தீ மூட்டியதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. அதன் பின்னரே போராட்டங்கள் பல்பரிமாணங்களை எடுத்துள்ளன. ஆகையால், ஒவ்வொன்றையும் மிகவும் கவனமாகக் கையாளவேண்டும்.

இதற்கிடையே, அரசாங்கத்தை எதிர்த்து, கண்டியிலிருந்து கொழும்புக்கான பாதயாத்திரையை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினர் முன்னெடுக்கவுள்ளனர். ஜே.வி.பியும் பல இடங்களில் போராட்டங்களை முன்னெடுத்திருந்தது.

ஒவ்வொரு போராட்டத்தையும் பார்க்குமிடத்து, அரசாங்கத்துக்கு எதிரான அதிருப்தியாளர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளது. மழைக்கு முளைக்கும் காளான்களைப் போல, ஆங்காங்கே முளைத்த அரசாங்கத்துக்கு ஆதரவான போராட்டங்கள், மழையில் காணாமல் போய்விட்டன.

பிரதமர் பதவிவிலக வேண்டும் என்ற சிந்தனை, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்குள் எழுந்துவிட்டது. எனினும், இடைக்கால அரசாங்கம் அமையுமாயின் அதில் தானே பிரதமர் என மஹிந்த ராஜபக்ஷ உறுதியாக தெரிவித்துள்ளார்.

தீ மூட்டப்பட்டதன் பின்னர், கங்குகள் கனன்று கொண்டிருப்பதால், தீர்க்கதரிசனத்துடன் செயற்படுவதே உசிதமாகும்.




## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

கற்றல் செயற்பாடு தொடர்ந்தும் இயங்க வேண்டிய கொடையாகும். ஆனால், ஒருசிலர் தொடர்ந்தும் கல்வியைத் தொடர்வதில்லை.

எந்தப் புதிய விடயங்களையும் அறிந்துகொள்ளும் போது, நெஞ்சம் நிறைந்துவிடுகின்றது. படித்த கல்வியை மறப்பதுகூட, அதை மீட்காத காரணத்தால் என்பதை பலர் உணர்வதில்லை.

நன்கு படித்தவர்களில் ஒருசாரார், கற்ற கல்விக்கு மாறான தொழிலில் ஈடுபடுவதால், படித்த அறிவை உதாசீனம் செய்வது போலாகிவிடும்.

எமது முன்னோர்கள், வயது முதிர்ந்த போதிலும் தங்கள் சிந்தனை ஓட்டங்களை எதற்கும் நிறுத்துவது கிடையாது. எதிர்காலத்தில், பிள்ளைகள் தொடர்ந்தும் இயங்க முடியாமல் இருக்க முடியாது. போட்டியுடன் வாழும் உலகம் இது. பதவி உயர்வுகள் பெறுவதற்கு புதிய வழிமுறையில் கல்வியைத் தொடரவேண்டியுள்ளது.

கேள்விக்கான பதிலொன்று தெரியாது விட்டால், சுயமாகவே அதற்கான பதிலைத் தேடி அறிவதே சிறப்பு. கல்வியில் குருவின் உதவியுடன் சுயமான தேடலும் அவசியம்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# ஐக்கிய மக்கள் சக்தியின் அரசியலமைப்பு திருத்த வரைபு



என்.கே. அஷோக்பரன்
Twitter: @nkashokbharan

பாராளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியாகவுள்ள ஐக்கிய மக்கள் சக்தி, அரசியலமைப்பு திருத்த சட்டமூல வரைபு ஒன்றை, வியாழக்கிழமை (21) சபாநாயகரிடம் கையளித்துள்ளதுடன், அந்த வரைபையும் வெளியிட்டுள்ளது. அரசியலமைப்புக்கான 21ஆவது திருத்த சட்டமூல வரைபாக இது அமைந்துள்ளது. 'கோ ஹோம் கோட்டா', 'கோ ஹோம் ராஜபக்ஷஸ்' போராட்டங்கள் கடுமையாகியுள்ள நிலையில், இலங்கை அடுத்த கட்டம் நோக்கி நகர்வதற்கும், இலங்கை அரசியல் ஸ்திரத்தன்மையை நோக்கி நகர்வதற்குமான முதற்படியாக, அரசியலமைப்பு மாற்றம் அவசியம் என்ற அடிப்படையில், ஐக்கிய மக்கள் சக்தியால் இந்தத் திருத்த வரைபு முன்வைக்கப்பட்டுள்ளது. குறித்த வரைபின் முக்கிய அம்சங்களை அலசுவதே இந்தப் பத்தியின் நோக்கமாகும்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அரசியலமைப்பு திருத்த வரைபின் பிரதான அம்சமானது, நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதாகும்.

1978ஆம் ஆண்டு, ஜே.ஆர். தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்ட இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பின் மூலமாக, நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறை, இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமை அறிமுகப்படுத்தப்படுவதற்கான யோசனை, முன்வைக்கப்பட்ட நாளிலிருந்து அதற்கெதிரான கடும் விமர்சனங்களும் எதிர்ப்பும், பல்வேறு தரப்புகளாலும் முன்வைக்கப்பட்டு வந்துள்ளன. அரசின் அதிகாரம், ஒரு நபரிடம் குவிவது, ஜனநாயகத்துக்கு பாதகமாகதொன்று. நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைக்கு எதிரான பிரதான விமர்சனமும் இதுதான். அக்டன் பிரபு சொன்னது போல,"அதிகாரம் கெடுக்கும்; முழுமையான அதிகாரம், முழுமையாகக் கெடுக்கும்".

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையின் கீழ், பாராளுமன்றம் தனது சுயாதீனத்தை இழந்துள்ளது என்ற விமர்சனத்தில் நியாயங்கள் இல்லாமல் இல்லை. பாராளுமன்றத்திலுள்ள, ஜனாதிபதியின் கட்சியினர், ஜனாதிபதியின் ஏவலாளிகளாகச் செயற்படும் பாங்கை, கடந்த 44 வருட கால நிறைவேற்று ஜனாதிபதி முறையில், இலங்கையர்கள் மிக வெளிப்படையாகவே அவதானித்திருக்கிறார்கள்.

ஆகவேதான், ஜனாதிபதியின் அதிகாரத்தை மட்டுப்படுத்துவதற்கான பெரும் அரசியல் தேவை ஏற்பட்டது. அதன் விளைவாக, அரசியலமைப்புக்கான 17ஆவது, 19ஆவது திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. ஆனால், அதிகார போதை மிகுந்தவர்கள், தமது அதிகாரத்தை விட்டுக்கொடுக்க விரும்பவில்லை. அதனால், மேற்சொன்ன 17ஆவது திருத்தம், 18ஆவது திருத்தத்தின் மூலம் இல்லாதொழிக்கப்பட்டது.

2015இல் 'நல்லாட்சி' அரசாங்கத்தின் வருகையின் பின்னர் கொண்டு வரப்பட்ட 19ஆவது திருத்தம், மீண்டும் ராஜபக்ஷர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர், 20ஆவது திருத்தத்தின் மூலம் இல்லாதொழிக்கப்பட்டது. அதன் விளைவுகளைத்தான் இலங்கையும் இலங்கையர்களும் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அரசியலமைப்பு திருத்த வரைபின் படி, ஜனாதிபதியானவர் அரசுத் தலைவராகவும் முப்படைகளின் தளபதியாகவும் தொடர்ந்தாலும், அவர் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குப் பதிலாக, பாராளுமன்றத்தால், ஐந்து வருட பதவிக் காலத்துக்காகத் தேர்ந்தெடுக்கப்படுபவராவார்.

ஜனாதிபதி, பாராளுமன்றத்தின் நம்பிக்கையை வென்றவரை பிரதமராக நியமிப்பார். இதில், ஜனாதிபதியின் தெரிவுக்கு இடமில்லை. பாராளுமன்றத்தின் நம்பிக்கையை வென்றவர் எவரென்றாலும், அவரைப் பிரதமராக நியமிக்க ஜனாதிபதி கடமைப்பட்டவராவார்.

ஜனாதிபதியானவர், பிரதமரின் ஆலோசனையின்படியே அமைச்சரவை அமைச்சர்களை நியமனம் செய்தல், மாற்றியமைத்தல், பதவிநீக்கம் செய்தல் என்பவற்றைச் செய்யலாம். அமைச்சரவையானது 25 வரையிலான அமைச்சர்களைக் கொண்டிருக்கும் என்பதோடு, அமைச்சரவை அந்தஸ்து இல்லாத ஏனைய அமைச்சர்கள் 25 பேர் வரை நியமிக்கப்பட முடியும். பிரதமரே அமைச்சரவையின் தலைவராக இருப்பார்.

இது தற்போதுள்ள அரசியலமைப்பின் நிலையிலிருந்து முற்றாக வேறுபட்டது. தற்போதுள்ள நிறைவேற்று ஜனாதிபதி-மைய நிர்வாக முறையிலிருந்து, பிரதமரைத் தலைவராகக் கொண்டு, அமைச்சரவை-மைய நிர்வாக முறைக்கு இலங்கையை மாற்றுவதாக இந்தத் திருத்தம் அமைகிறது.

மேலும், ஐக்கிய மக்கள் சக்தியின் அரசியலமைப்பு திருத்த வரைபின் படி, பிரதமர் பதவியானது, இறப்பின் மூலமோ, பதவி விலகலின் மூலமோ, பிரதமரானவர் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழப்பதன் மூலமோ, நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதன் மூலமோ, அல்லது பாராளுமன்றத்தால் அரசாங்கப் பாதீடு தோற்கடிக்கப்படுவதன் மூலமோ வெற்றிடமாகும்.

பிரதமர் பதவி வெற்றிடமாகும் போது, அரசாங்கம் கலையும். பிரதமர் பதவி வெற்றிடமாகும் போது, பாராளுமன்றத்தின் நம்பிக்கையை வென்ற வேறொரு பாராளுமன்ற உறுப்பினர் பிரதமராக ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார். பிரதமரும் அமைச்சரவையும் பாராளுமன்றத்திற்கு தனியாகவும் கூட்டாகவும் பொறுப்புடையவர்கள் ஆவார்கள்.

பாராளுமன்றமானது ஓர் அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றும் போது, குறித்த அமைச்சரானவர் பதவியிழப்பார். இந்த முன்மொழிவுகளும் தற்போதுள்ள அரசியலமைப்பில் இருந்து மாறுபட்டவை என்பதோடு, நிர்வாகத்துறை மீதான பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டை அதிகரிப்பதாகவும், நிர்வாகத்துறையின் பொறுப்புக்கூறலை அதிகரிப்பதாகவும் அமைந்துள்ளன.

மேலும், ஐக்கிய மக்கள் சக்தியின் அரசியலமைப்பு திருத்த வரைபின்படி, பாராளுமன்றமானது ஐந்து வருட காலத்துக்கென மக்களால் தேர்தெடுக்கப்படுவதுடன், பாராளுமன்றமானது அறுதிப் பெரும்பான்மையின்படியான தீர்மானமொன்றின் மூலம், குறித்த பதவிக்காலம் முடிவுறும் முன்பே, பாராளுமன்றத்தைக் கலைக்க முடியும்.

குறிப்பிடத்தக்கதொரு முன்மொழிவாக, கட்சி மாறி இயங்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள், குறித்த பாராளுமன்ற பதவிக்காலத்தின் போது அமைச்சர் பதவியை பெற்றுக்கொள்வது தடைசெய்யப்பட்டுள்ளது. மேலும், கட்சி மாறிய பாராளுமன்ற உறுப்பினர்கள், குறித்த கட்சியால் பதவி நீக்கம் செய்யப்படும் போது, அது தொடர்பில் விசாரிக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ள உயர் நீதிமன்றத்தின் அதிகாரமானது, குறித்த பதவி நீக்கலின் சட்டத் தகுதிப்பாடுகள் பற்றி மட்டும் ஆராய்வதற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கட்சி, பதவி நீக்கம் செய்த நடைமுறை பற்றி, உயர் நீதிமன்று ஆராய்வதற்கான அதிகாரத்தைக் கொண்டிராது.

குறித்த அரசியலமைப்பு திருத்த வரைபின் மிக முக்கியமானதோர் அம்சமாக அமைவது, அரசியலமைப்பு பேரவையின் மீள்அறிமுகம். சபாநாயகர் தலைமையில் அமையும் அரசியலமைப்பு பேரவையானது, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், பாராளுமன்றத்திலுள்ள ஏனைய கட்சிகளால் முன்மொழியப்பட்டுள்ள ஒரு பாராளுமன்ற உறுப்பினர், மற்றும் ஐந்து சுயாதீன உறுப்பினர்களைக் கொண்டு அமையும்.

சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான நியமனங்கள் தொடர்பில், கட்டாயம் ஏற்றுக்கொள்ள வேண்டிய பரிந்துரைகளை ஜனாதிபதிக்கு வழங்கவும், முக்கிய அரசுப் பதவிகளுக்கான நியமனங்கள் தொடர்பில் ஜனாதிபதியின் முன்மொழிவுகளை அங்கிகரிக்கும் அதிகாரத்தையும் கொண்டிருக்கும். ஏலவே 19ஆம் திருத்தத்தின் கீழ், பட்டியலிடப்பட்டிருந்த சுயாதீன ஆணைக்குழுக்களுடன், தகவலறியும் உரிமை ஆணைக்குழு, துறைமுக நகர் ஆணைக்குழு என்பனவும் அரசியலமைப்பு பேரவையின் பரிந்துரை அதிகாரத்துக்குள் கொண்டுவரப்படுவதுடன், அரசியலமைப்புப் பேரவையின் அங்கிகாரத்தின் படி, ஜனாதிபதியால் நியமிக்கக் கூடிய அரசுப் பதவிப் பட்டியலுக்குள், மத்திய வங்கி ஆளுநர் பதவியும் சேர்க்கப்பட்டுள்ளது.

மேலும், குறித்த அரசியலமைப்பு திருத்த வரைபில், தேசிய பாதுகாப்பு தொடர்பில் கொள்கை வகுப்பு, கொள்கை மேற்பார்வை செய்வதற்காக தேசிய பாதுகாப்பு பேரவையை ஸ்தாபிக்கும் ஏற்பாடுகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

மற்றுமொரு குறிப்பிடத்தக்க அம்சமாக, அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்குவதற்கென, பிரதமர் தலைமையில், நிதி, வெளிவிவகாரம், பாதுகாப்பு அமைச்சர்கள், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், பாராளுமன்றத்திலுள்ள ஏனைய கட்சிகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு பாராளுமன்ற உறுப்பினர், சட்டமா அதிபர், 12 வேறுபட்ட சுயாதீன துறைசார் விற்பன்னர்களைக் கொண்டமையும் அரசுப் பேரவையொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

சுருக்கமாகக் கூறின், இந்த அரசியலமைப்பு திருத்தத்தின் மூலநோக்கமானது ஜனாதிபதியிடம் குவிந்துள்ள அதிகாரத்தைக் குறைப்பதாகும். இன்று, இலங்கை எதிர்நோக்கியுள்ள நிலையிலிருந்து இலங்கை மீண்டு வரவேண்டுமென்றால், அதிகாரம் ஜனநாயகப் படுத்தப்படுதல் அவசியம்.

ஜனாதிபதி, ஒரே இரவில் இரசாயன உரத்தைத் தடை செய்ததன் விளைவாக இன்று உணவுத்தட்டுப்பாட்டை இலங்கை எதிர்நோக்கி நிற்கிறது. ஜனாதிபதியும் அவரால் தன்னிச்சையாக நியமிக்கப்பட்ட மத்திய வங்கி ஆளுநரும், இரண்டு வருடங்களுக்கு முன்பதாகவே சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடாததால் இலங்கை பெரும் பொருளாதார வீழ்ச்சியை சந்தித்து நிற்கிறது.

அரச இயந்திரத்தின் அத்தனை உயர் பதவிகளையும் ஜனாதிபதியே தீர்மானிக்கிறார். ஆகவே, இலங்கையின் இன்றைய நிலைக்கு காரணம், ஜனாதிபதி என்ற ஒரு நபரிடம், அளவற்ற அதிகாரம் குவிந்திருப்பது என்றால் அது மிகையல்ல. இது மாற்றப்பட வேண்டும் என்ற ஒரே நோக்கில் மட்டுமே, இந்தத் திருத்தம் முன்வைக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் திருத்த வரைபானது, இலங்கையின் அரசியல், அரசியலமைப்பு சார் பிரச்சினைகளுக்கு எல்லாம் முழுமையான தீர்வை வழங்கவில்லை. ஆனால், இந்த நொடிக்கு அவசியமான முதலுதவியைச் செய்யும் வகையிலானதொரு முன்னகர்வாகவே புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

## கடிதங்கள்

### சடலங்களைப் பெறுவதில் இடர்பாடு

முல்லைத்தீவு, மல்லாவி ஆதார வைத்தியசாலைக்கான சட்ட வைத்திய அதிகாரி, இதுவரை நியமிக்கப்படாமையால் சடலங்களை, உறவினர்கள் பெற்றுக்கொள்வதில் பெரும் இடர்பாடுகளை எதிர்கொள்கிறார்கள். சுமார் 110 கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ள முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு சென்று, உடற்கூற்றுப் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டிய நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவு, துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கிய பிரதேசங்களில் 22 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஆனால், குறித்த பிரதேசங்களில் திடீர் மரண விசாரணை அதிகாரிகள் கூட நியமிக்கப்படாத நிலைகானப்படுகின்றது.

இவ்வாறு, மல்லாவி ஆதார வைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரி இன்மை, பிரதேசத்துக்கான திடீர் மரண விசாரணை அதிகாரிகளின்மை காரணமாக, முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலைக்கு சடலங்களை எடுத்துச்சென்று, உடற்கூற்று பரிசோதனைகளை மேற்கொண்ட பின்னர், சடலத்தைக் கொண்டு வருவதற்காக மொத்தம் 220 கிலோ மீற்றர் தூரம் பயணிக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

இவ்வாறான நிலையில், பெரும் பண செலவை அநாவசியமாக மக்கள் எதிர்கொள்கின்றனர். வறுமை கோட்டுக்கு கீழுள்ள குடும்பங்கள், இதனால் பல மடங்கு துன்பங்களை அனுபவிக்கின்றன. எனவே, மல்லாவி வைத்தியசாலைக்கு சட்ட வைத்திய அதிகாரியை நியமிப்பதற்கும் குறித்த பிரதேசங்களுக்கான திடீர் மரண விசாரணை அதிகாரிகளை நியமிப்பதற்கும், சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, பிரதேச பொதுமக்களும் பொது அமைப்புகளும் கோரியுள்ளனர்.

– யது பாஸ்கரன்

# DFCC வங்கி ஆண்டறிக்கை வெளியீடு

DFCC வங்கி, 5 ஆண்டுகளுக்கு முன்பு நடைமுறைப்படுத்தப்பட்ட, பங்குதாரர்களை மையமாகக் கொண்ட, பன்முக வடிவ, பன்முக ஊடக அணுகுமுறைக்கு ஏற்ப, 2021 ஆம் ஆண்டிற்கான அதன் ஆண்டறிக்கையை அண்மையில் வெளியிட்டுள்ளது. அறிக்கையிடலுக்கான இந்தத் தனித்துவமான அணுகுமுறையானது, டிஜிட்டல் முறையில் இணைக்கப்பட்டதாக உலகம் மாறி வருகின்றமைக்கு மத்தியில், இன்னும் கூடுதலான அளவில் பங்குதாரர்களை மையப்படுத்திய வங்கியாக மாற உதவியுள்ளது. அதன் பரந்த மற்றும் மாறுபட்ட பங்குதாரர் சமூகத்தின் பல்வேறு தேவைகள் மற்றும் விருப்பங்களையும் இதன் மூலமாகப் பூர்த்தி செய்கிறது.

DFCC வங்கியின் ஆண்டறிக்கையானது, தொழில்துறையில் பின்வரும் தனித்துவமான அம்சங்கள் மற்றும் வடிவங்களைக் கொண்டுள்ளது: பங்குதாரர் குழுக்களின் பல்வேறு நலன்களை இலக்காகக் கொண்டு, HTML வடிவத்தில் ஒரு விரிவான ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை மற்றும் தகவல்களை எளிதாகக் கண்டறிந்து, பதிவுசெய்து, பகிர்ந்துகொள்வதற்கான மேம்பட்ட பயனர் அனுபவத்தை வழங்குகிறது. அதிக தேடுபொறி திறன் கொண்டதாக (search engine) இருப்பதால், இந்த வடிவம் பரந்த அளவிலான பார்வையாளர்களையும் இலக்கு வைக்கிறது.

மேலும், ஏனைய போட்டியாளர்களிடமிருந்து ஆண்டறிக்கையின் தோற்றம் மற்றும் உணர்வை வேறுபடுத்தும் வகையில் இடதுகைப்பக்க புத்தகவுரு சார்ந்த, கோப்பி மேசை புத்தக பாணியிலான வடிவமைப்பானது PDF, அச்சு மற்றும் இறுவட்டு வடிவங்களில் ஒரு சுருக்கமான ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை முதன்மையாக ஆவண காப்பகம் மற்றும் சட்டப்பூர்வ தேவைப்பாட்டு சமர்ப்பித்தல் நோக்கங்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.




பொதுமக்களின் அறிதல் குறிப்புக்காக ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மும்மொழிகளிலும் ஆண்டறிக்கை முக்கிய சுருக்கங்கள் மற்றும் வெளியீட்டிற்குப் பிந்தைய முக்கியமான தகவல்களை உடனடியாக பெற்றுக்கொள்வதற்கான ஆண்டறிக்கை புதுப்பிப்பு நுழைமுகம் மற்றும் இணைந்த ஆண்டறிக்கை புதுப்பித்தல் செயலி ஆகியனவும் உள்ளன.

இந்த ஆண்டு, வங்கியின் ஆண்டறிக்கையானது, 'Designed to Excel' கருப்பொருள் வடிவில் வடிவமைக்கப்பட்டது. டிஜிட்டல் கட்டமைப்பின் கட்டுமானத் தொகுதிகளைக் குறிக்கும் டெட்ரிஸின் (Tetris) அலங்கார மையக்கருத்தினாலான வடிவமைப்பையும் கொண்டுள்ளது.

DFCC வங்கியின் பங்குதாரர்களை மையமாகக் கொண்ட, டிஜிட்டல் முன்னுரிமை கொண்ட அறிக்கையிடல் கொள்கை தொடர்பில் சிரேஷ்ட துணைத் தலைமை அதிகாரியும், தலைமை நிதி அதிகாரியுமான, சிந்திகா அமரசேகர கருத்து வெளியிடுகையில், "எங்கள் பங்குதாரர்களுக்கு எளிதாகவும் திறன்மிக்க வழியிலும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளச் செய்வதற்கான எங்கள் முயற்சிகளை மேலும் கட்டியெழுப்பும் வகையில், 2021 ஆம் ஆண்டிற்கான எங்கள் எங்கள் ஆண்டறிக்கையின் PDF பதிப்பு முதல் முறையாக இடதுகைப்பக்க புத்தகவுரு நோக்குநிலையில் வெளியிடப்பட்டது. எங்கள் தரவு சேகரிப்பு, பகுப்பாய்வுகளால் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. இந்த வடிவத்தில் எங்கள் அறிக்கைகளைப் பார்க்கும் பெரும்பாலான பங்குதாரர்கள், 'டெப்லெட்' அல்லது 'டெஸ்க்டொப்' கணினியை இடதுகைப்பக்க புத்தகவுரு பயன்முறையில் பயன்படுத்துவதை நாம் கண்டறிந்தோம். எங்களது டிஜிட்டல் முன்னுரிமை அணுகுமுறை சிறந்த வரவேற்பைப் பெற்றுள்ளதுடன், எங்களின் 10,000 இற்கும் மேற்பட்ட பங்குதாரர்களில் 10% க்கும் குறைவான பங்குதாரர்களே இப்போது வழக்கமான தபால் மூலம் CD அல்லது அச்சிடப்பட்ட வெளியீட்டைக் கோருகின்றனர். இந்த அணுகுமுறை ஒரு தசாப்தத்துக்கும் மேலாக எங்கள் ஆண்டறிக்கைகளின் வெளியீடு மற்றும் விநியோகம் காபன்-நடுநிலையாக இருப்பதை உறுதிசெய்து, காகிதம் மற்றும் விநியோக நிர்வாக வலையமைப்புகள் மீது நாங்கள் தங்கியிருப்பதைக் குறைத்து, அனைவருக்கும் குறிப்பிடத்தக்க அளவில் செலவு மற்றும் நேரத்தை மீதப்படுத்திக் கொள்ளவும் இடமளிக்கின்றது" என்று தெரிவித்தார்.

# ஸ்டான்டர்ட் சார்ட்டட் உடன் யூனியன் அஷ்யூரன்ஸ் உடன்படிக்கை கைச்சாத்து

யூனியன் அஷ்யூரன்ஸ் பிஎல்சி, ஸ்டான்டர்ட் சார்ட்டட் உடன் பாங்கசூரன்ஸ் சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான பங்காண்மையில் கைச்சாத்திட்டுள்ளது. இலங்கையில் பாங்கசூரன்ஸ் பிரசன்னத்தை மேலும் விஸ்தரிப்பதற்கு இந்தப் பங்காண்மை, யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்துக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருக்கும்.

ஸ்டான்டர்ட் சார்ட்டட்டின் வாடிக்கையாளர்களுக்கு பரந்தளவு சிறந்த காப்புறுதித் தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதில் கவனம் செலுத்துவதாக இந்தப் பங்காண்மை அமைந்துள்ளது. இதில் சேமிப்பு, பாதுகாப்பு மற்றும் முதலீட்டு தீர்வுகள் போன்றன அடங்கியுள்ளதுடன், சிறந்த காப்புறுதி ஆலோசனைகளை வழங்குவதாகவும் அமைந்திருக்கும்.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜுட் கோம்ஸ் கருத்துத் தெரிவிக்கையில், "காப்புறுதித் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு நாம் காண்பிக்கும் அர்ப்பணிப்பை, இந்தப் பங்காண்மை மேலும் உறுதி செய்கிறது. இதன்மூலம், இலங்கையில் முன்னணி பாங்கசூரன்ஸ் சேவைகளை வழங்கும் நிறுவனம் எனும் கீர்த்தி நாமத்தை மேலும் வலிமைப்படுத்திக் கொள்ள முடியும். இலங்கையர்களின் கனவுக்கு வலுவூட்டும் மற்றுமொரு படியாக இது அமைந்துள்ளதுடன், எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த பெறுமதியை வழங்குவதற்கான எமது உறுதி மொழியை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. இலங்கையில் பாங்கசூரன்ஸ் சேவைக்கான வாய்ப்பை மேலும் அதிகரிப்பதாகவும் அமைந்துள்ளது" என்றார்.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம பாங்கசூரன்ஸ் அதிகாரி விந்தியா கூரே கருத்துத் தெரிவிக்கையில்,



"ஸ்டான்டர்ட் சார்ட்டட் போன்ற சர்வதேச வங்கியொன்றுடன் பங்காண்மையை ஏற்படுத்த முடிந்ததையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். எமது சென்றடைவை மேலும் விஸ்தரித்துக் கொள்வதற்கு இது உதவியாக அமைந்திருப்பதுடன், எமது புத்தாக்கமான தீர்வுகள் மற்றும் சேவைச் சிறப்பின் அனுகூலத்தை பல வாடிக்கையாளர்களுக்கு சென்றடையச் செய்வதற்கும் ஏதுவாக இருக்கும்" என்றார்.

இந்தத் தந்திரோபாய கைகோர்ப்பை ஸ்டான்டர்ட் சார்ட்டட்டும் வரவேற்றிருந்தது. நுகர்வோர், பிரத்தியேக மற்றும் வணிக வங்கியியல் பிரிவின் தலைமை அதிகாரி அரோஷன பெர்னாண்டோ தெரிவிக்கையில், "எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த நிதித் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு எம்மைத் தொடர்ந்தும் அர்ப்பணித்துள்ளதுடன், 'Here for good' எனும் எமது வர்த்தக நாம உறுதி மொழிக்கமைய உண்மையாகச் செயலாற்றுகின்றோம். யூனியன் அஷ்யூரன்ஸ் உடனான இந்தப் பங்காண்மையினூடாக, எமது வாடிக்கையாளர்களுக்கு நீண்ட கால பாதுகாப்பு திட்டத்தின் அனுகூலத்தை அனுபவிக்கக்கூடியதாக இருப்பதுடன், முதலீட்டுத் தீர்வாக அமைந்திருப்பதனூடாக பாதுகாப்பான எதிர்காலத்தையும் வழங்கும். எம் அனைவருக்கும் நிதிப் பாதுகாப்பான எதிர்காலம் என்பது முக்கியமானதாக அமைந்துள்ளது. யூனியன் அஷ்யூரன்ஸ் உடனான எமது பங்காண்மை என்பது எமது வாடிக்கையாளர்களின் சமகால தேவையை நிவர்த்தி செய்ய உதவியாக அமைந்திருக்கும் என கருதுகின்றோம்" என்றார்.

இந்தப் பங்காண்மையினூடாக ஸ்டான்டர்ட் சார்ட்டட்டின் வாடிக்கையாளர்களுக்கு சௌகரியமான ஒரே கூரையின் கீழ் அமைந்த சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடிந்துள்ளதுடன், தமது வங்கியியல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்கையில் பரந்தளவு சிறந்த காப்புறுதித் தீர்வுகளையும் இலகுவாகப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

முன்னணி பாங்கசூரன்ஸ் சேவை வழங்குநர் எனும் வகையில் யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் வெற்றிகரமான செயற்பாடு என்பதற்கு, ஒப்பற்ற வாடிக்கையாளர் சேவையுடன் புத்தாக்கமான டிஜிட்டல் தீர்வுகளை வழங்குவதனூடாக மேம்படுத்தப்பட்டுள்ளது. ஆயுள் காப்புறுதித் தீர்வுகளில் பெருமளவு மக்கள் நாட்டம் காண்பிக்கும் நிலையில், இந்தப் பங்காண்மையினூடாக, நிபுணத்துவ ஆலோசனைகள், உயர் தீர்வுகள், சிறந்த நிதி ஆலோசனைகளை வாடிக்கையாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கக்கூடியதாக இருக்கும்.

சென்னை

மத அடையாள உடைகள் விவகாரம்:

# தடைகோரிய மனுமீது இன்று விசாரணை

தமிழகத்தில் பள்ளி, கல்லூரிகளில் மாணவர்கள் மத அடையாள உடைகளை அணிய தடை விதிக்க வேண்டுமென உச்ச நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்தமனு, நீதிபதி துரைசாமி தலைமையிலான அமர்வில் இன்று (25) விசாரணைக்கு எடுத்துக்கொள்வத்கு பட்டியலிடப்பட்டுள்ளது.




கர்நாடக மாநிலத்தில் பள்ளி, கல்லூரிகளில் மத அடையாளங்களை வெளிப்படுத்தும் ஆடைகளை அணிந்து வர மாணவ/ மாணவிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடையை எதிர்த்து இஸ்லாமிய மதத்தை சேர்ந்த மாணவிகள் சிலர் உச்சநீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனு மீதான விசாரணை இடம்பெறும் அதேநேரத்தில், கர்நாடகாவில் தற்போது பள்ளி, கல்லூரி தேர்வுகள் நடைபெற்று வருவதால், ஹிஜாப் உட்பட எந்தவித மத அடையாளங்களை வெளிப்படுத்தும் ஆடைகளை அணிந்து பள்ளி, கல்லூரிக்கு மாணவ/மாணவிகள் வர மாநில அரசு தடை விதித்துள்ளது.

இந்நிலையில், தமிழகத்தில் உள்ள பள்ளி, கல்லூரிகளில் மாணவ/மாணவிகள் மத அடையாள உடைகளை அணிய தடை விதிக்க வேண்டும் என சென்னை உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்து முன்னேற்ற கழகத்தின் தலைவரும், வழக்கறிஞருமான திருப்பூரை சேர்ந்த கோபிநாத் என்பவர் மனுவைத் தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில், தமிழகத்தில் பள்ளி மாணவ/ மாணவிகளிடம் இருக்கக்கூடிய வேறுபாடுகளை களையக்கூடிய நோக்கில், 1960ஆம் ஆண்டு மாணவர்களுக்கான சீருடை அறிமுகப்படுத்தப்பட்டது.

இது தொடர்பான விதிகளும் வகுக்கப்பட்டுள்ளன. ஆனால், பல பள்ளிகள் இந்த விதிகளைப் பின்பற்றுவதில்லை, ஹிஜாப் போன்ற மத அடையாளங்களுடன் கூடிய ஆடைகளை மாணவ/ மாணவிகள் அணிந்து வருகின்றனர். இது சீருடை விதிகளுக்கு எதிரானது என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் மத்தியில் சமத்துவத்தை ஊக்குவிக்கவும், மதத்தின் பெயரால் சமத்துவமின்மை ஏற்படுவதை தடுக்கவும் கர்நாடகாவில் ஹிஜாப் பிரச்சினை போல தமிழகத்திலும் பிரச்சினை ஏற்படாமல் தடுக்கவும் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாக மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி

# அமைச்சர் வருவதால் பலூன் வியாபாரி கைது



புதுச்சேரியில் உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் வருகையை முன்னிட்டு பலூன் விற்றுக்கொண்டிருந்த வியாபாரி ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சென்னைக்கு சனிக்கிழமை (23) வந்த அமித் ஷா, நேற்று (24) புதுச்சேரிக்கு வந்தார். அங்கு, பாரதிய ஜனதா கட்சியினர் (பா.ஜ.க) பிரம்மாண்ட வரவேற்பு கொடுத்தனர். அதேசமயம், 'கோ பேக் அமித் ஷா' என்ற டேக் இணையத்தில் நெட்டிசன்கள் மூலம் டிரெண்ட் செய்யப்பட்டது.

அப்போது அவர்கள், ஹிந்தி திணிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்தும், "தேர்தல் வாக்குறுதிகளை செயற்படுத்தாத அமித்ஷா திரும்ப போ" என்றும் என்று கோஷங்கள் எழுப்பப்பட்டன. கறுப்பு பலூன்கள் பல இடங்களில் பறக்க விடப்பட்டு கோஷங்கள் எழுப்பப்பட்டன. இந்த நிலையில், சாரம் பகுதியில் காஸ் பலூன் விற்க இருசக்கர வாகனத்தில் வந்த பலூன் வியாபாரி ஜெய்சங்கரை பொலிஸார் கைது செய்தனர். கறுப்பு பலூன் விற்கவே ஜெய்சங்கர் வந்ததாக அவருக்கு எதிராக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.



# நீராடச் சென்ற பெண்

வட மாநில ஷாட் துர்கை திருவிழாவை முன்னிட்டு பெண் ஒருவர் கங்கை நதியில் நீராட சென்றார்.

சாம்ராஜ்நகர்

# மோட்டார் சைக்கிளில் இளம்பெண் சல்லாபம்



சாம்ராஜ்நகர் மாவட்டம் குண்டலு பேட்டை (தாலுகா) நகர் அருகே செல்லும் சாலையில் காதல் ஜோடி ஒன்று, வெள்ளிக்கிழமை காலையில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தது.

திடீரென அந்த இளம்பெண் மோட்டார் சைக்கிளின் முன்பக்கம் அமர்ந்தார். தனது காதலனை பார்த்தவாறு அமர்ந்து இறுக அணைத்துக் கொண்டார்.

மேலும் இருவரும் சில்மிஷத்திலும், சல்லாபத்திலும் ஈடுபட்டனர். ஆனால், காதலன், மோட்டார் சைக்கிளை நிறுத்தாமல் அப்படியே ஓட்டிச் சென்றார். இதை அந்த வழியாக சென்ற பலரும் பார்த்து முகம் சுழித்தனர். இருப்பினும் அந்த காதல் ஜோடி தங்களை மறந்து உல்லாச வானில் பறந்தபடி மோட்டார் சைக்கிளில் சென்றனர்.




ஆலந்தூர்

# மண்ணோடு தொடர்பில் இருங்கள்

உலக பூமி தினத்தை முன்னிட்டு, ஈஷா யோகா மைய நிறுவனர் சத்குரு தொடங்கியுள்ள 'மண் காப்போம் இயக்கம்' சார்பாக 'மண்ணோடு தொடர்பில் இருங்கள்' என்ற பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி, சென்னை, மீனம்பாக்கம் விமான நிலையத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் சினிமா நடன இயக்குனர் கலா, 'பிக்பாஸ்' பாலாஜி முருகதாஸ் உள்பட 300க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு மண்ணை காப்பது தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தினர். அப்போது 'அனைவரும் மண்ணை காப்போம்' என்ற விழிப்புணர்வு நடனம் ஆடினார்கள். இது பற்றி நடன இயக்குனர் கலா கூறும்போது, "பருவ நிலை மாற்றம் உட்பட பல விடயங்களை பற்றிப் பேசுகிறோம். ஆனால், மண் குறித்து பேசுவதில்லை. மண் கோடான கோடி உயிர் ஜீவன்களை வாழ வைத்துக்கொண்டு இருக்கிறது. மண்ணின் ஊட்ட சக்தியை குறைத்து வருகிறோம். மண் நல்லா இருந்தால்தான் விவசாயம் நன்றாக இருக்கும். மண்ணில் இரசாயனத்தை போடுவதால் மண் கெட்டு விடுகிறது. 20ஆம் நூற்றாண்டின் முதற்பகுதியில் இருந்து 19 சதவீதம் மண் ஊட்டச்சத்து குறைந்து உள்ளது. மண் நல்லா இருந்தால்தான் மனிதன் ஆரோக்கியமாக இருக்க முடியும்" என்றார்.



நைஜீரியா

எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையில் தீ;

# 100 பேர் கருகினர்

தெற்கு நைஜீரியாவில்,இமோ மாகாணத்தில் இயங்கி வந்த சட்டவிரோத எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்ததில் 100 பேர் தீயில் கருகி உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 22 ஆம் திகதி நள்ளிரவு இடம்பெற்ற இத் தீவிபத்தில், உயிரிழந்தவர்களின் உடல்கள் வீதிகளிலும், மரக்கிளைகளிலும் சிதறிக் கிடப்பதாக அந்நாட்டுப் பொலிஸார் தெரிவித்தனர்.


மேலும் திருட்டுக் கும்பல்கள் எண்ணெய்யை களவாட குழாய்களை உடைத்திருக்கலாம் என்றும் அதன் மூலம் இத் தீவிபத்து இடம்பெற்று இருக்கலாம் எனவும் கூறப்படுகிறது.

இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருவதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்கா

அதிவேக இணைய சேவையைப் பெற

## புதிய முயற்சி




அதிவேக இணைய சேவையைப் பெறுவதற்காக உலக செல்வந்தர்களின் வரிசையில் முதலிடத்தில் உள்ள எலான் மஸ்க்கின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம், 53 ஸ்டார் லிங் செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புளோரிடாவில் உள்ள கேப் கேனவெரல் ஏவுதளத்தில் இருந்து கடந்த 21ஆம் திகதி பால்கன்-9 ரொக்கெட் மூலம், குறித்த 53 செயற்கைகோள்களை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது. இதுவரை சுமார் 2 ஆயிரத்து 300 செயற்கைகோள்களை ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் விண்ணுக்கு அனுப்பி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், ஒட்டுமொத்தமாக 12 ஆயிரம் செயற்கைகோள்களை அனுப்ப பெடரல் தொலைத்தொடர்பு ஆணைக்குழுவிடம் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் அனுமதி பெற்றுள்ள நிலையில், அதை 30,000 உயர்த்த அந்நிறுவனம் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனா

## 26 ஆம் திகதி வரை ஊரடங்கு நீடிப்பு



சீனாவின் ஷாங்காய் நகரில் தீவிரமடைந்து வரும் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாகக் கடந்த 3 வாரங்களுக்கும் மேலாக அங்கு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், அங்கு கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், நடைமுறையில் உள்ள ஊரடங்கை வரும் 26ஆம் திகதி வரை நீட்டித்து சீனஅரசு உத்தரவிட்டுள்ளது.

எனினும் தொற்று பாதிப்பு எண்ணிக்கை குறையும் பட்சத்தில் படிப்படியாக தளர்வுகள் அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சீனா

## ரோபோ எலிகளை களமிறக்கிய சீனா



மீட்பு, மற்றும் தேடுதல் பணிகளில் ஈடுபடும் வகையிலான ரோபோ எலியை சீனாவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் உருவாக்கி உள்ளனர்.


நடை, பாவனை என கொறிக்கும் தன்மையைத் தவிர்த்து, அச்சுஅசல் உண்மையான எலியை போன்று பெய்ஜிங் தொழில் ஆராய்ச்சி நிறுவன விஞ்ஞானிகள் உருவாக்கி உள்ளனர்.

குறுகிய இடைவெளி பகுதிகளில் நடத்தப்படும் தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளுக்கு ரோபோ நாய்களை விட இயந்திர எலிகள் மிகுந்த பயனளிக்கக் கூடியதாக இருக்கும் என விஞ்ஞானிகள் தெரிவித்தார். அண்மைக் காலமாக நாய், மீன் உள்ளிட்டவை ரோபோ முறையில் உருவாக்கப்பட்ட நிலையில் தற்போது புது முயற்சியாக ரோபோ எலியை விஞ்ஞானிகள் உருவாக்கி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

உக்ரேன்

ரஷ்யா – உக்ரேன் இடையே

## போர் நிறுத்தம்?



ரஷ்யாவுக்கும் உக்ரேனுக்கும் இடையே இடம்பெற்றுவரும் போரானாது இரண்டு மாதங்களையும் கடந்து நீடித்து வருகின்றது.

அதேசமயம், உலக நாடுகள் இப்போரைக் கைவிடுமாறு கூறிவந்தாலும் ரஷ்யா தொடர்ந்து உக்ரேன் மீது தாக்குதல் நடத்தி வருகின்றது. இதனிடையே உக்ரேன், ரஷ்யா போர் குறித்த பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் தற்போது வரை சுமூகமான தீர்வு கிடைக்கவில்லை.

இந்நிலையில், உக்ரேன் ஜனாதிபதி வொலோடிமிர் செலன்ஸ்கி போரை முடிக்கலாம் எனவும் பேச்சுவார்த்தைக்கு தயாராக உள்ளதாகவும் ரஷ்ய ஜனாதிபதியை பேச்சுவார்த்தைக்கு மீண்டும் அழைத்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்திருப்பதாவது, "இப் போரை நிறுத்த வேண்டும் என்றும் பேச்சுவார்த்தை மேற்கொள்ள வேண்டும் என்றும் ஆரம்பத்திலிருந்தே ரஷ்ய ஜனாதிபதியிடம் நான் தெரிவித்துக் கொண்டிருக்கிறேன். போரை முடிப்பதற்காக நான், அவரை சந்திக்க வேண்டும் என்று விரும்புகிறேன். ஆனால், அவரைச் சந்திக்க கூடிய எண்ணம் எனக்கு இல்லை. ஏனெனில், எங்களின் நட்பு நாடுகள் மீது நம்பிக்கை வைத்திருக்கிறோம். ஆனால், ரஷ்ய நாட்டின் மீது எங்களுக்கு நம்பிக்கை கிடையாது. மோசமான சூழ்நிலையை எதிர்கொண்டிருக்கும் மக்களை, எப்படியாவது காப்பாற்றிவிட வேண்டும் என்று எண்ணுகிறேன். எனவே தான் பேச்சுவார்த்தை மேற்கொள்ள தயார்" என்று தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல்

# பெங்களூரை சுருட்டிய சண்றைசர்ஸ்



இந்தியன் பிறீமியர் லீக்கில், மும்பையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூருடனான போட்டியில் 68 ஓட்டங்களுக்குள் அவ்வணியை சண்றைசர்ஸ் ஹைதரபாத் சுருட்டியது.

மார்கோ ஜன்சன், தங்கராசு நடராஜனிடம் தலா 3, ஜகதீஷ சுஷிந்திடம் 2, புவ்னேஷ்வர் குமார், உம்ரான் மலிக்கிடம் தலா ஒவ்வொரு விக்கெட்டைப் பறிகொடுத்து 16.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 68 ஓட்டங்களையே பெங்களூர் பெற்றது.

பதிலுக்கு, 69 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சண்றைசர்ஸ், அபிஷேக் ஷர்மாவின் 47 (28) ஓட்டங்களோடு 8 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக மார்கோ ஜன்சன் தெரிவானார்.

இதேவேளை, மற்றைய போட்டியில் கொல்கத்தா நைட் றைடர்ஸை குஜராத் டைட்டான்ஸ் வென்றிருந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத், அணித்தலைவர் ஹர்டிக் பாண்டியாவின் 67 (49) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 156 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், டிம் செளதி 3, அன்ட்ரே ரஸல் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு, 157 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா, ரஸல் 48 (25) ஓட்டங்களைப் பெற்றபோதும் 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 148 ஓட்டங்களையே பெற்று எட்டு ஓட்டங்களால் தோல்வியடைந்தது. மொஹமட் ஷமி, ரஷீட் ஆகியோர் தலா 2, அல்ஸாரி ஜோசப், லொக்கி பெர்கியூசன் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக மார்கோ ஜன்சன் தெரிவானார்.

இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் பஞ்சாப் கிங்ஸும், சென்னை சுப்பர் கிங்ஸும் மோதவுள்ளன.



புத்தளம் பிரதேச செயலக மட்டத்திலான கால்பந்தாட்டத் தொடர்

## சம்பியனான லிவர்பூல்

■ எம்.யூ.எம். சனூன்

புத்தளம் பிரதேச செயலக பிரிவில் நடைபெற்ற கால்பந்தாட்டத் தொடரில் புத்தளம் லிவர்பூல் அணி சம்பியனாகியுள்ளது.

புத்தளம் பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான இத்தொடர் அண்மையில் புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

புத்தளம் பிரதேச செயலக விளையாட்டு அதிகாரி சுமித்தால் நடாத்தப்பட்ட இத்தொடரில் புத்தளம் லிவர்பூல், தில்லையடி நியூ பிரண்ட்ஸ், புத்தளம் விம்பிள்டன், மணல்குன்று அல் அஷ்ரக் மற்றும் பாலாவி கழகம் ஆகிய ஐந்து அணிகள் பங்குபற்றின.

இறுதிப் போட்டியில் புத்தளம் லிவர்பூல் அணியோடு விம்பிள்டன் அணி எதிர்த்தாடியதில் லிவர்பூல் அணி 2-0 கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாக தகுதி பெற்றது.

லிவர்பூல் அணிக்காக எம். ஹிமாஸ் இரண்டு கோல்களையும் பெற்றுக்கொடுத்தார்.

இவ்வெற்றியின் மூலம் அடுத்து வரும் மாவட்ட ரீதியிலான போட்டிக்கு புத்தளம் பிரதேச செயலக ரீதியில் லிவர்பூல் அணி தகுதி பெற்றுள்ளது.

மட்டக்களப்பு இந்துக் கல்லூரியை வென்று

## இரண்டாவது சுற்றில் கல்முனை சாஹிரா தேசிய கல்லூரி

■ அஸ்ஹர் இப்றாஹீம்

இலங்கை பாடசாலைகள் கிரிக்கட் சம்மேளனம் நடத்தும் அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான மூன்றாவது பிரிவு கடினபந்து கிரிக்கெட் போட்டியொன்றில் கல்முனை சாஹிரா தேசிய கல்லூரி அணி 123 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. சாஹிரா தேசிய கல்லூரி மற்றும் மட்டக்களப்பு இந்துக் கல்லூரி அணிகளுக்கு இடையிலான கிறிக்கட் போ ட்டி அண்மையில் மட்டக்களப்பு சிவானந்தா தேசிய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சாஹிரா தேசிய கல்லூரி அணி முதலில் துடுப்பாட்டத்தில் ஈடுபட்டு 50 ஓவரில் 9 விக்கட்டுகளை இழந்து 282 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாட களமிறங்கிய மட்டக்களப்பு இந்துக் கல்லூரி அணியினர் 37.3 ஓவர்களில் 159 ஓட்டங்களுக்கு ள் சகல விக்கட்டுகளையும் இழந்தனர்.

இப் போட்டியில் 106 பந்து வீச்சுகளுக்கு ஐந்து ஆறு ஓட்டங்கள், 14 நான்கு ஓட்டங்கள் உள்ளடங்கலாக 110 ஓட்டங்களைப் பெற்ற கல்முனை சாஹிரா தேசிய கல்லூரி வீரர் அஸ்மத் ஸஹி போட்டியின் நாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.



வடக்கின் சமரில்

## வெற்றி வாகை சூடிய சென். ஜோன்ஸ்




யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்குமிடையிலான 115ஆவது வடக்கின் சமரில் சென். ஜோன்ஸ் வெற்றி வாகை சூடியது.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்து நேற்று முன்தினம் முடிவுக்கு வந்த இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ், தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், குகனேஸ்வரன் ஹரிஸன் 41, அன்டன் அபிஷேக் 40 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், கவிதர்சன், விதுசன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், கௌதம், நியூட்டன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு, தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்தி, சகல விக்கெட்டுகளையும் இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், ஶ்ரீதரன் சாரங்கன் 41, நிஷாந்த் அஜய் ஆட்டமிழக்காமல் 28 ஓட்டங்களைப் பெற்றார்கள். பந்துவீச்சில், விதுசன் 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

இந்நிலையில், தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ், சபேசனின் 105, நேசகுமார் எபனேஸர் ஜெஸியல் 35, சுகேதன் 34 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 7 விக்கெட்டுகளை இழந்து 220 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இனிங்ஸை இடைநிறுத்தியது. நியூட்டன் 3, கௌதம் மற்றும் கஜன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

அந்தவகையில், தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யா. மத்தி, 163 ஓட்டங்களைப் பெற்று 99 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில், ஜெரோஷன் 53, சாரங்கன் 33, சஞ்சயன் 27 ஓட்டங்களைப் பெற்றனர். அஷ்னாத் 6, கஜகர்ணன், விதுஷன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர். இப்போட்டியின் நாயகனாக சபேசனும், சிறந்த பந்துவீச்சாளராக அஷ்னாத்தும் தெரிவாகினர்.




விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் திங்கட்கிழமை, 25 ஏப்ரல் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது